# பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்படலாம்!

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் ஏனைய செலவீனங்கள் காரணமாக ஜூலை மாதம் நடைபெறவுள்ள வருடாந்த கட்டண திருத்தத்தின்போது குறைந்தபட்ச பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறைந்தபட்ச பஸ் கட்டணம் 40 ரூபாவாக இருக்க வேண்டும் என சங்கத்தின் தலைவர்...

02 பக்கம்

Follow us

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 502 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 06ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (19.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 17 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30



## புதிய அமைச்சரவை விபரம்

புதிய அமைச்சரவை அமைச்சர்கள் 17 பேர் நேற்று முற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

01. **தினேஷ் குணவர்தன** - பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
02. **டக்ளஸ் தேவானந்தா** - கடற்றொழில்
03. **ரமேஷ் பத்திரன** - கல்வி, பெருந்தோட்டக் கைத்தொழில்
04. **பிரசன்ன ரணதுங்க** - பொதுமக்கள் பாதுகாப்பு, சுற்றுலா
05. **திலும் அமுனுகம** - போக்குவரத்து, கைத்தொழில்
06. **கனக ஹேரத்** - நெடுஞ்சாலைகள்
07. **விதுர விக்ரமநாயக்க** - தொழில்
08. **ஜானக வக்கும்புர** - விவசாயம், நீர்ப்பாசனம்
09. **ஷெஹான் சேமசிங்க** - வர்த்தகம், சமுர்த்தி அபிவிருத்தி
10. **மொஹான் பிரியதர்ஷன டி சில்வா** - நீர் வழங்கல்
11. **விமலவீர திசாநாயக்க** - வனவிலங்கு மற்றும் வன வளப் பாதுகாப்பு
12. **காஞ்சன விஜேசேகர** - வலுசக்தி, மின்சக்தி
13. **தேனுக விதானகமகே** - இளைஞர் மற்றும் விளையாட்டு
14. **நாலக கொடஹேவா** - வெகுசன ஊடக அமைச்சு
15. **சன்ன ஜெயசுமன** - சுகாதாரம்
16. **நசீர் அஹமட்** - சுற்றுச்சூழல்
17. **பிரமித பண்டார தென்னகோன்** - துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் நிதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் அமைச்சுகளில் மாற்றங்கள் செய்யப்படவில்லை.

# புதுமுகங்களுடன் அமைச்சரவை!

## பெண்கள் இல்லை - சிரேஷ்ட அமைச்சர்கள் அவுட்

## நீதியமைச்சுக்கும் ஒருவர் நியமிக்கப்படவில்லை

(நா.தினுஷா)

அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் ஜனாதிபதி மாளிகையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டது.

17 பேராக வரையறுக்கப்பட்ட இந்த அமைச்சரவையில் மூத்த அமைச்சர்கள் பலர் இல்லை. அத்துடன், பெண்கள் எவரும் அமைச்சரவைக்குள் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. நீதியமைச்சுப் பதவியும் வெற்றிடமானது.

02 பக்கம்

## அமைச்சர் பதவி வரப்பிரசாதம் அல்ல: அரசியலமைப்பு மாற்றங்களுக்கு ஒத்துழைப்பு

### சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாமை, இரசாயன உரத்தை வழங்காமை அரசு செய்த தவறுகளே



### புதிய அமைச்சர்கள் முன்னிலையில் ஜனாதிபதி தெரிவிப்பு

02 பக்கம்

## அரசியலமைப்பை திருத்துவதற்கான முன்மொழிவு விரைவில் அமைச்சரவைக்கு

### நேற்று கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் அறிவிப்பு

மக்களுக்கு பொறுப்புக்கூறும் அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு பல்வேறு தரப்பினரும் முன்வைத்த கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு, அது தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்தியுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் மற்றும் சட்டவாக்க சபை போன்றே நீதித்துறையின் சாத்தியமான கருத்துக்களை உள்ளடக்கிய அரசியலமைப்பை திருத்துவதற்கான முன்மொழிவொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு பிரதமர்...

02 பக்கம்

## நாடாளுமன்றில் தனிக்குழுவாக சுயாதீன எம்.பிக்கள் 41 பேர்

### சபாநாயகருக்கும் அறிவிப்பு

அரசாங்கத்தில் இருந்து சுயாதீனமாக செயற்படும் 41 பேர் கொண்ட குழு நாடாளுமன்றத்தில் தனியான குழுவாக அமர தீர்மானித்துள்ளது.

இது குறித்து சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும் என பிவித்துரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

குழுவின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 13 உறுப்பினர்களும் தேசிய சுதந்திர முன்னணி உள்ளிட்ட கட்சிகளின் 10 உறுப்பினர்களும்...

02 பக்கம்

## அமைச்சர்கள் பதவியேற்பு நிகழ்வை புறக்கணித்தாரா பிரதமர் மஹிந்த?

### ஆளுங்கட்சிக்குள் தொடங்கியது பூசல்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட நேற்றைய நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளாமை அரசியல் வட்டாரங்களில் பேசுபொருளாகியுள்ளது.

புதிய அமைச்சரவை பதவிகள் சம்பந்தமான தனது அதிருப்தியை வெளியிடும் வகையிலேயே பிரதமர் அதில் கலந்துகொள்ளவில்லை என அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பாக சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு அமைச்சு பதவிகள் கிடைக்காததே பிரதமரின் அதிருப்திக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

02 பக்கம்

சர்வதேச நாணய நிதிய பேச்சுகளை நடத்தச் சென்றுள்ள நிதியமைச்சர் அலி சப்ரி நாடு திரும்பியபின்னர் நாடாளுமன்றத்தில் அது தொடர்பில் அறிவிப்பொன்றை விடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்.




### கமெண்ட் கந்தர்..



என்னதான் இருந்தாலும் மட்டக்களப்பு ஜோசியர் ஐயாவுக்கு நல்ல தைரியம்தான் பாருங்கோ...

## இலங்கையின் உணவு நெருக்கடியை தீர்க்க பலமிக்க நாடுகளுடன் பேச்சு நடத்திய ரணில்



இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள உணவு நெருக்கடியை தீர்க்க நிவாரணத்தை பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பலமிக்க 5 நாடுகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடன் ரணில் விக்ரமசிங்க, இந்த பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் இதனைவிட கடுமையான உணவு நெருக்கடியை இலங்கை எதிர்நோக்க நேரிடும் என அந்நாடுகளிடம் முன்னாள் பிரதமர் விளக்கியுள்ளார்.

இந்த பிரச்சினையில் இலங்கைக்கு...

02 பக்கம்


## எரிபொருள் விலையை உயர்த்திய லங்கா ஐ.ஓ.சி.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை நேற்று முன்தினம் முதல் அதிகரித்துள்ளது.

அதற்கமைய, சகலவிதமான பெற்றோல் வகைகளின் விலைகளும் 35 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ள அதேவேளை, சகலவிதமான டீசல் வகைகளின் விலைகளும் 75 ரூபாவினால் அதிகரிக்கப்பட்ள்ளது.

இந்த விலை அதிகரிப்பு நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல்...

02 பக்கம்




## கப்ரால் மீதான வெளிநாட்டு பயணத்தடை மேலும் நீடிப்பு



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத்தடையை எதிர்வரும் மே மாதம் 02 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

எதிர்வரும் 02ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் அறிவித்து அஜித் நிவார்ட் கப்ராலுக்கு நேற்று மீண்டும் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## கோட்டாபய ஆட்சி வீழாது; ஏப்ரல் 25இற்கு பின் சுமுகநிலை

### எதிர்வு கூறுகிறார் ஜோதிடர் விநாயகமூர்த்தி குருக்கள்

(கனகராசா சரவணன்)

கோட்டாபய ராஜபக்ஷவை மாற்ற வேண்டிய காலம் ஏப்ரல் மாதம் 13ஆம் திகதியுடன் முடிவடைந்து விட்டது. எனவே, அவரது ஆட்சி வீழாது,



மீறினால் இதைவிட கடினமான ஆட்சி உருவாகும். அதேவேளை, காலிமுகத் திடலும் கலங்கி நிற்கும். ஆழமறியாமல் காலை விடாதீர்கள் எனப் பிரபல ஜோதிடரும்...

02 பக்கம்

# இராஜாங்க அமைச்சர்கள் பதவிப்பிரமாணம்

புதிய இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று (18) பதவிப்பிரமாணம் செய்துள்ளனர்.

(1) **பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்** – பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

(2) **ரோஹண திசாநாயக்க** – உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சு

(3) **அருந்திக்க பெர்னாண்டோ** – பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

(4) **லொஹான் ரத்வத்த** – நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

(5) **தாரக்க பாலசூரிய** – வெளிவிவகார இராஜாங்க அமைச்சு

(6) **இந்திக்க அனுருத்த** – வீடமைப்பு இராஜாங்க அமைச்சு

(7) **காதர் மஸ்தான்** – கிராமிய பொருளாதார, பயிர்ச்செய்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

(8) **அசோக்க பிரியந்த** – வர்த்தக இராஜாங்க அமைச்சு

(9) **ஏ.அரவிந்தகுமார்** – தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு

(10) **கீதா குமாரசிங்க** – கலாசார அரங்கியற் கலை இராஜாங்க அமைச்சு

(11) **குணபால ரத்னசேகர** – கூட்டுறவு சேவை, விற்பனை அபிவிருத்தி, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

(12) **கபில நுவன் அத்துகோரள** – சிறு ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

(13) **சுரேன் ராகவன்** – கல்விச் சேவை, மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு

(14) **கயாஷான் நவனந்த** – சுகாதார இராஜாங்க அமைச்சு

(15) **சனத் நிஷாந்த** – நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சு

(16) **சிறிபால கம்லத்** – மகாவலி இராஜாங்க அமைச்சு

(17) **அனுராத ஜயரத்ன** – நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சு

(18) **சிசிர ஜயகொடி** – சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சு

(19) **பிரசன்ன ரணவீர** – கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

(20) **டி.வீ. சானக்க** – சுற்றுலாத்துறை மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சு

(21) **டி.பி.ஹேரத்** – கால்நடை வளங்கள் இராஜாங்க அமைச்சு

(22). **டயனா கமகே** - போக்குவரத்து இராஜாங்க அமைச்சு

23). **விஜித்த பேருகொட** - துறைமுகங்கள், கப்பற்துறை இராஜாங்க அமைச்சு

24). **சீதா அரம்பேபொல** - கல்வி மற்றும் தொழில்நுட்பம் இராஜாங்க அமைச்சு

# 20ஆவது திருத்தத்துக்கு கைகளை உயர்த்தியோர் கைகூப்பி மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்

## த.மு.கூ. தலைவர் மனோ எம்.பி.



20ஐ அகற்றிக்கொண்டு 19இன் அம்சங்களை உள்வாங்கி 21ஆம் திருத்தத்தை கொண்டுவர அரசு இணங்கியுள்ளதாக கட்சி தலைவர்கள் கூட்டத்தில் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன அறிவித்தார்.

இந்நிலையில் 20ஆம் திருத்தத்துக்கு ஆதரவாக கையை உயர்த்தி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அதீத அதிகாரங்களை கொடுத்து, அதை நியாயப்படுத்தியும் பேசிய எம்.பிகள், அதே கைகளை உயர்த்தி வாக்களித்த மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டிய நிலைமை இன்று உருவாகிவிட்டது. இவ்வளவு சீக்கிரம் கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வாதிகாரம் வீழும் என இவர்கள் கற்பனையிலும் நினைத்திருக்க மாட்டார்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், 20ஐ அகற்றவும், 19இன் அம்சங்களை உள்வாங்கி 21ஆம் திருத்த வரைபு ஒன்றை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவும் அரசாங்கம் தயார் என சபை முதல்வர் தினேஷ் குணவர்தன அறிவித்தார். இதை பிரதான எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அகற்றும் யோசனையும் தனக்கு கிடைத்ததாக சபாநாயகர் கட்சி தலைவர்களுக்கு கூறினார். எனினும் முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அகற்றப்பட சர்வஜன வாக்கெடுப்பு நடத்திட வேண்டிவரும் என்பதால், அதற்கு நாடு இன்றைய சூழலில் தயாரில்லை என்பதால், முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தற்சமயம் அகற்ற பெரும்பாலான கட்சி தலைவர்கள் ஆதரவு வழங்கவில்லை.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அகற்றப்பட்டால், விகிதாசாரத் தேர்தல் முறைமை, 13ஆம் திருத்த மாகாணசபைகள் ஆகியவற்றையும் அகற்ற வேண்டிவரும் என சில ஆளுங்கட்சி பிரதிநிதிகள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். இது தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு ஏற்புடைய நிலைப்பாடுகள் இல்லை. தமது நிலைப்பாடும் இதுவே என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் நண்பர் ரிஷாட் பதியுதீன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் நண்பர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் என்னிடம் தெரிவித்தார்கள்.

# நஸீரின் பதவியேற்பு ஏற்கவே முடியாதது!

## உயர்பீட கூட்டம் 22இல் நடக்குமென மு.கா. தலைவர் அறிக்கை

முழுநாடும் ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு போராடிக்கொண்டிருக்கின்ற நிலையில், கட்சியின் கட்டுப்பாட்டை மீண்டுமொரு தடவை மீறிக்கொண்டு அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்ட நஸீர் அஹமட் தன்னை ஓர் அவமானச் சின்னமாக மாற்றிக்கொண்டுள்ளார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஏற்கனவே கட்சியின் கட்டுப்பாட்டை மீறியமைக்காக நஸீர் அஹமட் உட்பட 4 உறுப்பினர்களையும் கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கி, ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில், அமைச்சு பதவியை பெற்றுக் கொண்டமையானது மிகவும் அசிங்கமானது. கட்சியின் உச்சபீடம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (22) உத்தியோகபூர்வமாக ஒன்றுகூடி, நஸீர் அஹமட்டுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

# அன்னை பூபதியை நினைவுகூர 11 பேருக்கு தடையுத்தரவு

## மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் விதிப்பு

(க.சரவணன்)

அன்னை பூபதியின் 34ஆம் ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிக்க வேண்டாம் என மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தால் தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஷ்வரன், ஞா.ஸ்ரீநேசன், மாநகர முதல்வர் தி.சரவணபவான், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இ.பிரசன்னா, இலங்கை தமிழரசு கட்சி வாலிபர் அணி தலைவர் கி.சேயோன் , மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் அணி தலைவர் லோ.திபாகரன், சிவில் அமைப்பு தலைவர் ச.சிவயோகநாதன், வாழைச்சேனை குணசேகரம் ஆகிய 11 பேருக்கு எதிராக தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அன்னை பூபதி நினைவு வணக்கம் அவரின் உடலம் நல்லடக்கம் செய்யப்பட்ட நாவலடி கடற்கரையோரம் அமைந்துள்ள கல்லறையில் வழமையாக நினைவுகூரப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் பிரித்தானியாவில் விருது பெற்ற நடிகர்

பிரித்தானியாவின் ஒலிவியர் விருது வழங்கும் விழாவில் சிறந்த நடிகருக்கான விருதை பெற்ற இலங்கையரான இளம் நடிகர் ஹிரான் அபேசேகர இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

விருதை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் இலங்கையில் நிலவும் நிலைமை பற்றி பேசிய அவர், இலங்கையில் போராட்டம் நடத்திவருவோருக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஹிரான் அபேசேகர நேற்றிரவு கொழும்பு காலிமுகத்திடலில் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு சென்றார்.

நாடகம், ஒபார நடனம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஒலிவியர் விருது வழங்கப்படுகிறது. ஹிரான் அபேசேகர Life Of Pi என்ற நாடகத்தில் நடித்தமைக்காக சிறந்த நடிகருக்கான விருதை அவர் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை

## - அரசு அறிவிப்பு

**பொதுப்போக்குவரத்து மற்றும் உள்ளக நடவடிக்கைகள் தவிர்ந்த இதர பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லையென சுகாதார அமைச்சர் சன்ன ஜெயசுமண நேற்று அறிவித்துள்ளார்.**

## புதுமுகங்களுடன்...

முன்னாள் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மகிந்தானந்த அளுத்கமகே, ரோஹித்த அபேகுணவர்தன, ஜனக்க பண்டார தென்னக்கோன், பந்துல குணவர்தன, காமினி லொக்குகே, எஸ்.எம்.சந்திரசேன, சீ.பி. ரத்நாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, டளஸ் அலகப்பெரும, சரத் வீரசேகர. எஸ்.பி.திசாநாயக்க ஆகியோருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படவில்லை.

எஸ்.பி.திசாநாயக்க கைத்தொழில் அமைச்சராக பதவியேற்று சுமார் ஒரு மாத காலம் மாத்திரமே அந்த பதவியை வகித்தார். அவர் கடந்த மார்ச் 3ஆம் திகதி கைத்தொழில் அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்திருந்தார். அவரும் நேற்றைய அமைச்சரவையில் இடம்பெறவில்லை.

இதற்கிடையில் அரசாங்கத்தின் பிரதம கொறடாவாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக இந்தப் பதவியில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ செயற்பட்டார்.

## அரசியலமைப்பை...

மஹிந்த ராஜபக்ஷ எதிர்பார்த்துள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

திருத்தப்பட்ட அரசியலமைப்பினூடாக மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும் என்பது பிரதமரின் எதிர்பார்ப்பாகும் என்பதுடன், அரசியலமைப்பை திருத்துவதற்கான முன்மொழிவொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்பார்த்துள்ளதாக பிரதமர் அலுவலகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

**கட்சித்தலைவர்கள் கூட்டம்**

இதற்கிடையில், நேற்று கட்சித்தலைவர்கள் கூட்டம் நாடாளுமன்றக் கட்டிடத்தொகுதியில் நடைபெற்றது. இங்கு அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆளுங்கட்சியின் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன அரசியலமைப்பு திருத்தத்திற்கான வரைபினை விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர்கள் பதவியேற்பு...

இதன் காரணமாக பிரதமர், புதிய அமைச்சரவை பதவியேற்கும் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை என அரசியல் வட்டாரத்தில் தகவல்கள் பரவி வருகின்றன.

இந்த நிலையில், புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்து சிறிது நேரத்தில் அமைச்சரவை உறுப்பினர்களை அலரி மாளிகைக்கு அழைக்க பிரதமர் நடவடிக்கை மேற்கொண்டார். இதன்போது அரசாங்கத்தின் அடுத்த வேலைத்திட்டங்கள் தொடர்பாக விரிவாக பேசப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடந்த கூட்டமொன்றிலும் பிரதமர் மஹிந்த அமைச்சரவை நியமனம் தொடர்பில் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

## கப்ரால் மீதான...

கடந்த 07ஆம் திகதி நீதவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய, அவர் நேற்று (18) மன்றில் ஆஜராகாத காரணத்தினால் மீண்டும் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனுவெல முன்னிலையில் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிரான முறைப்பாடு நேற்று (18) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவருக்கு இவ்வாறு மீண்டும் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டது.

மத்திய வங்கியின் ஆளுநராக செயற்பட்ட காலப்பகுதியில், திறைசேரி பற்றுச்சீட்டுக்களை தமக்கு நெருக்கமானவர்களுக்கு விற்பனை செய்தமையூடாக அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டி முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

06 குற்றச்சாட்டுக்களின் கீழ், முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னக்கோன் தாக்கல் செய்துள்ள தனிப்பட்ட முறைப்பாட்டை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதவான், நீதிமன்றத்தில் நேற்று (18) ஆஜராகுமாறு கடந்த 07ஆம் திகதி அறிவித்தல் பிறப்பித்தார்.

விடயங்களை ஆராய்ந்த மேலதிக நீதவான், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநருக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடையையும் விதித்து உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் பதவி...

அமைச்சர் பதவி என்பது வரப்பிரசாதம் அல்ல. அது ஒரு பாரிய பொறுப்பாகும். எந்தவொரு கூடுதல் சலுகைகளையும் பயன்படுத்தாமல் நேர்மையான, திறமையான மற்றும் தூய்மையான நிர்வாகத்திற்கு அர்ப்பணிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிய அமைச்சர்களிடம் கேட்டுக்கொண்டார்.

தங்களின் கீழ் உள்ள நிறுவனங்கள் ஊழலற்றதும் மக்கள் சேவைக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் நிறுவனங்களாகவும் மாற்றப்பட வேண்டும். பல நிறுவனங்கள் பாரிய நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், அதனை வேலை வாய்ப்பில் நிரப்பாமல், அவற்றை வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நிறுவனங்களாக மாற்றுவதே அமைச்சரின் பொறுப்பாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை அமைச்சர்கள் மத்தியில் நேற்று (18) முற்பகல் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்களினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது பற்றி வருத்தம் தெரிவித்த ஜனாதிபதி, தற்போதைய சவால்கள் மற்றும் சிரமங்களை நிர்வகிப்பதற்கான தனது பொறுப்பில் இருந்து விலகப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

மக்கள் படும் இன்னல்களைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் ஒரு கும்பல் உருவாகியுள்ளது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தலையிடும் என ஜனாதிபதி தெரிவித்தார். அரசியல் காரணங்களால் பல தசாப்தங்களாக தாமதமாகி வரும் சில தீர்மானங்கள் எவ்வளவு கடினமாக இருந்தாலும் எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் சட்டம் இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உரியது. அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் தெரிவிக்கும் கருத்துகள் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்டு நிறைவேற்றிக் கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. அதற்காக எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்திற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எதிர்கால சந்ததியினரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், பொருளாதாரத்தை சீர் செய்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அதியுயர் அரசியலமைப்புக்கு மதிப்பளித்து, தேவையான மாற்றங்களைச் செய்வதன் மூலம், நாடு தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுவிக்கப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி, அதற்குஅவசியமானஒத்துழைப்பைவழங்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும் உரிய நேரத்திற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாமை, இரசாயன உரத்தை விவசாயிகளுக்கு வழங்காமை அரசு செய்த தவறுகளே என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## பஸ் கட்டணங்களும்...

கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், அனைத்து பஸ் கட்டணங்களும் 50 வீதம் அதிகரிக்க வேண்டும் என்றார்.

தற்போது நிலவும் எரிபொருள் நெரிசல் காரணமாக பஸ்கள் அதிக விலைக்கு டீசலை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதாகவும் கெமுனு விஜேரத்ன குறிப்பிடுகின்றார்.

தற்போதைக்கு பஸ் கட்டண திருத்தத்தை எதிர்பார்க்கவில்லை எனவும், முறையான முறைமை தயாரிக்கப்படாவிட்டால் ஜூலை மாதத்திற்குள் கட்டணத்தை திருத்தியமைக்க வேண்டியிருக்கும் எனவும் கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்றில்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்த அனுர யாப்பா உள்ளிட்ட குழுவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் 2 உறுப்பினர்களும் தனியான குழுவாக நாடாளுமன்றத்தில் அமர்வதற்கு தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பான முடிவை அவர்கள் நேற்று சபாநாயகருக்கும் அறிவித்துள்ளனர். சபாநாயகருடன் நடந்த சந்திப்பில் இது குறித்து விரிவாக பேசப்பட்டுள்ளது.

## எரிபொருள் விலையை...

நடைமுறைக்கு வந்துள்ளது.

அதற்கமைய, பெற்றோல் 92 - 338 ரூபாவாகவும், பெற்றோல் 95 - 367 ரூபாவாகவும், பெற்றோல் யூரோ 3 - 347 ரூபாவாகவும், ஒட்டோ டீசல்- 289 ரூபாவாகவும், சுப்பர் டீசல் - 327 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் உணவு...

எப்படி உதவுவது என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக அந்நாடுகள், முன்னாள் பிரதமரிடம் கூறியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தால், இலங்கைக்கு உதவுவது இலகுவாக இருக்கும் என இந்த 5 நாடுகளின் பிரதிநிதிகள் முன்னாள் பிரதமருக்கு அறிவித்துள்ளன.

## கோட்டாபய ஆட்சி...

மட்டு. அம்பிளாந்துறை சித்தி விநாயகர் ஆலய பிரதம குருவுமான விநாயகமூர்த்தி குருக்கள் நேற்று (18) எதிர்வு கூறியுள்ளார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட குரு, ராகு கேது மாற்றங்களும் தற்போது வக்கிரம் அடையப்போகும் சனி வக்கிரப் பெயர்ச்சியும் ஏப்ரல் 28ஆம் திகதிவரையும் பதவியில் இருந்தால் அவரை யாரும் நெருங்கமுடியாது.

கோட்டாபய ராஜபக்ஷவை மாற்றவேண்டிய காலம் ஏப்ரல் மாதம் 13ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது. ஆட்சி வீழாது, மீறினால் இதைவிட கடினமான ஆட்சி உருவாகும். ஏப்ரல் 14ஆம் திகதிக்குபின் புதிய அரசியல் திட்டங்களை மாற்றியமைத்து அமைச்சர்களையும் மாற்றியமைத்து பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகண்டு, எதிர்வரும் ஏப்ரல் 25-30ஆம் திகதிக்கு பின் சுமுகமான நிலைமைக்கு மாற்றமடையும்.

முன்பு ஒரு பதிவில் நாட்டில் பெரும் குழப்பங்கள் ஏற்படும், முக்கியமான பதவிகளில் மாற்றம் செய்யவேண்டும், இல்லாவிட்டால் அரசியல் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு என்று குறிப்பிட்டுள்ளேன். இது தற்போது ஆபத்தான நிலைமைக்கு வந்துவிட்டது. ஆபத்து ஏற்படாது. கோட்டா (கோ தான்) என்பது அரசன். எனவே அரசனை நெருங்கமுடியாது.

எந்த ஒரு அரசாங்கமும் ஜோதிட அறிவுள்ள அமைச்சரை முதலில் அமைக்கவேண்டும். அப்படி அமைத்திருந்தால் விமல் வீரவங்ச போன்றோர் அரசியலில் மாற்றம் அடைந்திருக்க மாட்டார்கள். இவை அனைத்துக்கும் காரணம், கடந்த காலத்தில் ஏற்பட்ட குரு, ராகு கேது மாற்றங்களும் தற்போது வக்கிரம் அடையப்போகும் சனிவக்கிரப் பெயர்ச்சியும் ஏப்ரல் 28ஆம் திகதிவரையும் பதவியில் இருந்தால் அவரை யாரும் நெருங்கமுடியாது. இத்தனைக்கும் காரணம் கிரக அமைப்பும் நாட்டில் மூன்று வருடங்கள் கொரோனா கெடுபிடியால் இந்து ஆலயங்களின் வழிபாடுகள் தடைப்பட்டு முடக்கப்பட்டதாலேயே இவ்வளவு துன்பங்களுக்கும் காரணம்.

அதேவேளை, உலகப்பார்வையின் பதிவு விரைவில் வெளிவரும். எமது கடந்தகால பதிவில் மூன்றாம் உலகப்போர் பற்றி கூறியிருந்தோம். இதைத் தடுப்பது மிகவும் கடினம். ஏப்ரல் 14ஆம் திகதிக்குப்பின் உலக பொருளாதாரம் இலங்கையின் நிலைமைக்கு வரலாம். 2023 ஏப்ரல் வரையும் உலகம் சுகம்பெற இறைவனைப் பிரார்த்திப்போம் என அவர் எதிர்வு கூறியுள்ளார்.

# மக்கள் விடுதலை முன்னணியின் அரச எதிர்ப்பு தொடர் பேரணி

## வாதுவையிலிருந்து நேற்று முன்னெடுப்பு



அரசாங்கத்துக்கு எதிராக 74 வருட சாபக்கேட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என்ற தொனிபொருளில் மக்கள் விடுதலை முன்னணியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள மாபெரும் மக்கள் பேரணி இன்று (19) கொழும்பை வந்தடையவுள்ளது.

இந்தப் பேரணி நேற்று முன்தினம் (17) பேருவளை நகரிலிருந்து ஆரம்பமாகியிருந்தது. இரண்டாம் நாளான நேற்று (18) வாதுவ பிரதேசத்திலிருந்து இந்தப் பேரணி ஆரம்பித்தது.

இந்நிலையில், இன்றைய தினம் மொரட்டுவை நகரிலிருந்து கொழும்பை வந்தடையவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

நேற்றைய பேரணி பாணந்துறை பிரதேசத்தை வந்தடைந்தபோது பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இந்த அரசாங்கத்தை பதவியிலிருந்து நீக்க மக்கள் ஆட்சியொன்றை உருவாக்க வேண்டும் என்பதே இந்த மூன்றுநாள் தொடர் பேரணியின் எதிர்பார்ப்பு என்றும், இன்றைய தினம் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டாரத்தை வந்தடையும் எனவும் கட்சி அறிவித்துள்ளது.



# எரிபொருள் தட்டுப்பாட்டால் சாரதிகள் ஆர்ப்பாட்டம்

## கெலிஓயாவில் பதற்றம்



(கம்பளை யோகா)

கண்டி, கெலிஓயா நகரில் இருக்கும் பெற்றோல் நிலையத்தில் நேற்று (18) எரிபொருள் இருக்கவில்லை என்பதால் இன்று அதிகாலை முதல் வாகனங்கள் நீண்ட வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

நேற்று மதியம்வரை பெற்றோல் மற்றும் டீசல் என்பன கிடைக்காத காரணத்தால் வாகன சாரதிகள் கம்பளை - கண்டி பிரதான வீதியை மறித்துப் போராட்டம் செய்தனர்.

இதன் காரணமாக அந்தப் பிரதேசத்தில் நேற்று கடும் வாகன நெரிசலை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பாதையை முழுமையாக மறைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும் பேராதெனிய போக்குவரத்துப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடிய பின்னர், பெற்றோல் பவுசர் ஒன்றை மாத்திரம் அழைப்பதாகக் கூறிய பின்னர் போராட்டத்தில ஈடுபட்ட வாகன சாரதிகள் தமது போராட்டத்தை நிறைவுக்குக் கொண்டு வந்தனர்.

# புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில் வாகன விபத்து

## இருவர் பரிதாபமாக உயிரிழப்பு



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் மதுரங்குளி செம்பட்டை பகுதியில் நேற்று முன்தினம் (17) இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மதுரங்குளி வேல்சிமனபுர பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய நபரும், மதுரங்குளி வீரபுர பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபருமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக மதுரங்குளி பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மதுரங்குளியிலிருந்து புத்தளம் நோக்கிப் பயணம்செய்த மோட்டார்சைக்கிள் ஒன்றும் எதிர்த்திசையிலிருந்து வந்த துவிச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார்சைக்கிளை செலுத்திச்சென்ற சாரதியும், பின்பக்கமாக அமர்ந்து சென்ற நபரும், துவிச்சக்கரவண்டியில் பயணித்த நபரும் படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

எனினும், மோட்டர்சைக்கிளில் பயணித்த இருவரும் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்த நபர் புத்தளம் தள வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கே.கே.ஜி.விக்ரமசிங்கவின் ஆலோசனையில் போக்குவரத்துப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் பவுசர் விபத்து



(ஹாலிஎல)

கொழும்பில் இருந்து பதுளையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு எரிபொருளை ஏற்றிச் சென்ற எண்ணெய் தாங்கி ஒன்று பண்டாரவளை - பதுளை வீதியில் தோவா பகுதியை அண்மித்த உடுகும்பல்வெல பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி நேற்று (18) விபத்துக்குள்ளாகியுள்ளது.

எரிபொருள் பவுசர் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால் ஏற்பட்ட விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

# பல்கலை விரிவுரையாளர்களின் அடையாளப் பேரணி இன்று

(யாழ். செய்தியாளர்)

கொழும்பு - காலிமுகத்திடலில் அரசுக்கு எதிராக நடத்தப்படும் பொதுமக்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அடையாளப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

பொதுமக்களின் வாழ்வுரிமைக்காக காலிமுகத்திடலில் நடத்தப்படும் போராட்டத்துக்கான தமது தார்மீக ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கொழும்பு பல்கலைக்கழக முன்றலிலிருந்து காலிமுகத்திடல் நோக்கி இந்த அடையாளப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளம் அறிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் அதனையண்டிய பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் நேரடியாக இந்த அடையாளப் பேரணியில் கலந்துகொள்வார்கள் எனவும், நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் அதே காலப்பகுதியில் அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் அடையாளப் போராட்டமொன்றை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.









ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கம் உடனடியாக பதவி விலகவேண்டுமெனக் கோரி கொழும்பு காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டம் பத்தாவது நாளாக நேற்றும் (18) முன்னெடுக்கப்பட்டது.

(படப்பிடிப்பு: எஷான் தஸநாயக்க)



தெஹிவளை - கல்கிசை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் வருடாந்த இப்தார் நிகழ்வொன்றை நேற்று முன்தினம் (17) ஞாயிற்றுக்கிழமை தெஹிவளை களுபோவில முகையிதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் ஹாஜி இஸ்மாயில் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வுக்கு கொழும்பு மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் பரிபலான சபையின் தலைவர், செயலாளர்கள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (படங்கள்: அஷ்ரப் ஏ சமத்)

# அரசாங்கத்துக்கு எதிராக ஹட்டனில் இரண்டாம் நாளாகவும் ஆர்ப்பாட்டம்



(க.கிஷாந்தன்)

ஜனாதிபதி மற்றும் தற்போதைய அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரி கொழும்பு காலிமுகத்திடல் மற்றும் நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த போராட்டத்திற்கு ஒருமைப்பாட்டை தெரிவிக்கவும், வலுசேர்க்கவும் இரண்டாவது நாளான நேற்றும் (18) ஹட்டன் மல்லியப்பூ சந்தியில் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயகத்துக்கான மக்கள் குரல் எனும் தொனிப்பொருளின்கீழ் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து நேற்று முன்தினம் (17) இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், இன்றைய போராட்டத்தில் கோ கோட்டா ஹோம், மலையக மக்களுக்கு விடிவு கிடைக்க வேண்டும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு



ஆளுமை உள்ள அரசாங்கம் உருவாக வேண்டும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனசாட்சியோடு நடந்துகொள்ள வேண்டும், விலை குறை. அடுத்த தலைமுறை வாழ வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளை காட்சிப்படுத்தினர்.

அத்தோடு, கறுப்புக் கொடிகளை ஏந்தியிருந்ததோடு, கோஷங்களையும் எழுப்பியிருந்தனர். பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தின்போது ஹட்டன் மல்லியப்பூ சந்தியில் GO GOTA HOME கிராமத்தின் கிளை அங்குராப்பணம் செய்துவைக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.


## வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை |
|---|---|---|
| WP PG - 1XXX | KDH201-5008075 | DUAL PURPOSE LDF KDH201V TOYOTA |

- வாகனம் பரிசோதனை செய்தல் : இல 8/A, ஆர் எ டீ மேல் மாவத்தை, கொழும்பு 04.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2022 ஏப்ரல் 20, 21ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை. ஏப்ரல் 22ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டென்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 2022 ஏப்ரல் 22ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டென்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டென்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, இல :140, அதுருகிரிய வீதி, ஹோமாகம.
- டென்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள மற்றும் டென்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, இல :140, அதுருகிரிய வீதி, ஹோமாகம.

டென்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்படுள்ள முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டென்டர் பத்திர கடித உறையின் முன்பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டென்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.

கடன் அறவீட்டு அதிகாரி,
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.
இல. 165, கின்சி வீதி கொழும்பு 08
தொலைபேசி இல. : 0112 000 000

COMMERCIAL CREDIT

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஏப்ரல் 19ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ஸ்தம்பிதமடையும் சுகாதாரத்துறை

நாட்டில் மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான நிலைமை காரணமாக இருதயநோய் மற்றும் மாரடைப்பினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக சுகாதார நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மைய வாரங்களில் இவ்வாறு மாரடைப்பினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 20 வீதத்தால் அதிகரித்துள்ளதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது குறித்து இருதயநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளதாவது,

"இருதயநோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையே இதற்குப் பிரதான காரணமாகும். அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, எரிபொருள், எரிவாயு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றமை, இதனால் ஏற்படுகின்ற ஆவேசமான நிலைமை ஆகியவை இதற்குக் காரணமாகும்.

குறிப்பாக நீண்ட வரிசைகளில் பொதுமக்கள் காத்திருக்கும்போது முறுகல் நிலை ஏற்படுகிறது. குடும்பத்தாரின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமை காரணமாக பெற்றோர் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இதனால் அவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுகிறது.

அத்துடன் நித்திரையின்மையையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதிக நேரம் வரிசைகளில் காத்திருப்பதால் நித்திரையைத் தவிர்க்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு பொதுமக்கள் தள்ளப்படுகின்றனர். சுமார் எட்டு மணித்தியால நித்திரை மனிதர்களுக்கு நாளாந்தம் அவசியமாகும். எனினும், அது தவிர்க்கப்படும்போது நோய்வாய்ப்படுகின்றனர். நமது நாட்டு மக்கள் நோய்வாய்ப்படுகின்றமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

மேலும், உயர் குருதி இரத்த அழுத்தத்தின் காரணமாகவும் நாட்டு மக்கள் பாதிப்படைகின்றனர். நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியான நிலைமை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். இல்லாவிட்டால் நிலைமை மேலும் மோசடையக்கூடும்" என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் உயிர்காக்கும் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அண்மையில் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இப்போதும் கூட பல்வேறு வைத்தியசாலைகளில் இருதயநோய் மற்றும் புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கான உயிர்காக்கும் மருந்து வகைகள் இல்லையென அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் நிமித்தம் வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பிரஜைகளிடம் உதவி கோரப்பட்டுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. மோசமான நிதி மற்றும் பொருளாதார முகாமைத்துவம் காரணமாக மருந்து மற்றும் மருத்துவ உபகரணப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், நோயாளர்களின் உயிரைக் காப்பாற்றுவதில் சுகாதாரத்துறை கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. இந்த இக்கட்டான நேரத்தில் நோயாளர்களைப் பராமரிக்கும் சேவைகளை தொடர்வதற்கு ஆதரவு வழங்குமாறு வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் அமைப்புகளிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

உண்மையில் நமது நாட்டுக்கு இப்படியொரு நிலைமை ஏற்படும், நாட்டு மக்கள் இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்படுவார்கள் என யாரும் எதிர்பார்க்கவில்லை. நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள் என ஒவ்வொரு தரப்பும் மாறி மாறி குற்றம் சுமத்துகிறார்கள்.

நாட்டில் ஒரு ஸ்திரமான பொருளாதாரத்தை ஏற்படுத்துவோமென தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. எனினும், நீண்டகால திட்டமிடல்கள் இல்லாமை, குறுகிய அரசியல் இலாபத்துக்காக அந்த நோக்கமும், அதற்கான செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பொருளாதார ரீதியாக நாணயத்தின் இருப்பு குறித்து அரச உயர்மட்டம் அறிந்திருந்தும்கூட அதனை நிலையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக குறுகிய காலத் தீர்வுகளைப் பெறும் வகையில் நாணயம் அச்சிடப்பட்டது. அதன் விளைவை இன்று நாம் அனைவரும் அனுபவித்து வருகிறோம்.

இதன் காரணமாக, சுகாதாரத்துறையும் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளது. இது மக்களின் உயிருடன் தொடர்புபட்டதாகும். சுகாதாரத்துறை சீராகவுள்ளதென இயலாமையை மறைப்பதற்கு அரசாங்கம் முற்பட்டாலும் நாட்டின் நிலைமை எந்தளவுக்கு மோசமாகியுள்ளதென்பதை மேலே குறிப்பிட்டுள்ள விடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மக்கள் பெரும் மன உளைச்சலில் காணப்படுகிறார்கள். அடுத்தவேளை உணவு குறித்து அதிகம் சிந்திப்பதால் நோய்வாய்ப்படுகிறார்கள். அதனாலேயே மாரடைப்புக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மக்கள் பாதிக்கப்பட்டாலும் வைத்தியசாலைகளில் அவர்களுக்கு வழங்குவதற்கு மருந்துவகைகள் இல்லையென்பது எத்தனை துயரம்?

அடுத்து சுகாதாரத்துறையில் பேரழிவு ஏற்படப்போகிறது என்பதையே இந்த நிலைமை சுட்டிக்காட்டுகிறது. இனியும் நடவடிக்கை எடுக்க தாமதமாகுமானால் இந்த மனிதப் பேரழிவை யாராலும் தடுக்க முடியாது. இலங்கை வரலாற்றில் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஒரு கறுப்புப் புள்ளியாக மாறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# மக்கள் மனங்களில் வாழும் அன்னை பூபதி!





2022 ஏப்ரல் 19 அன்னை பூபதியின் 34ஆவது ஆண்டு நினைவாகும்

கடந்த 34 வருடங்களுக்கு முன்னர் வடக்கு, கிழக்கில் ஓர் அந்நிய நாட்டுப்படை எம் மண்ணில் நிலை கொண்டிருந்த காலம். அது இலங்கை – இந்திய ஒப்பந்தம் 1987 ஜூலை 29 ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டு 13ஆவது அரசியலமைப்பு மூலம் மாகாணசபை சட்டமூலம் அறிமுகமான காலம்.

அந்தக்காலத்தில் இந்திய அமைதிப்படை இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகள் எங்கும் முகாம் அமைத்து, வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு அமைதி என்ற போர்வையில் பல துன்புறுத்தலகளை செய்து வந்த காலம். அப்படியான வேளையில்தான் அன்னை பூபதி சாகும்வரை உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொள்ளவேண்டிய நிலை உருவானது.

முதலில் யார் இந்த அன்னை பூபதி என்பதைப் பார்ப்போம். மட்டக்களப்பு – அம்பாறை அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளர்களில் ஒருவராவார். 1932ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03ஆம் திகதி மட்டக்களப்பில் பிறந்த அவர் தனது 56ஆவது வயதில் இந்த தியாகத்தில் தன்னை ஈர்த்தார்.

விடுதலைப்புலிகளுக்கும், இந்திய அமைதிப் படைக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் இந்தியப் படைக்கு எதிராக குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது. அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசுக்கெதிராக உண்ணாநோன்புப் போராட்டத்தைத் தொடங்கினர்.

1. உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும்.

இந்த கோரிக்கைகளை முன்வைத்தே மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் குருந்தை மரநிழலில் 1988, மார்ச் 19ஆம் திகதி சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை அன்னை பூபதி ஆரம்பித்தார்.

மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டத்தால் விடுதலை பெற்ற பாரத நாடு என வரலாறு கூறப்படும் இந்திய நாடு, அன்னை பூபதியின் அகிம்சை வழிப் போராட்டத்தை கணக்கில் எடுக்கவில்லை.

போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னமே இந்தியப்படை அதிகாரிகளுடன் பல பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அன்னையர் முன்னணியின் கோரிக்கைகள் எதுவுமே இந்தியப்படையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை.

ஆனால், தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணா நோன்புப் போராட்டத்தில் அணி திரண்ட நிலையில், 1988ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், அந்தப் பேச்சுவார்த்தையில் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

போராட்டம் தொடர்ந்து நடந்தது. 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினர் கொழும்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அந்த பேச்சுவார்த்தையும் கணக்கில் எடுக்கப்படவில்லை அதன் பின்னரே சாகும் வரை உண்ணாநோன்புப் போராட் டத்தைத் தொடங்க முடிவு எடுத்தனர்.

அன்னம்மா டேவிட் என்ற தாயாரே இந்த உண்ணாவிரதம் இருப்பதற்காக தாமாகவே முன்வந்தார். அவர் உண்ணா நோன்பை 1988ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் நாள் அமிர்தகழி மாமாங்கேஸ்வர் கோயிலில் ஆரம்பித்தார். ஆனால், இந்தியப்படையினர் உண்ணாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்தி சென்றதால் அவரால் தனது போராட் டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

இந்த நிலையில்தான் பூபதியம்மாள் தன் போராட்டத்தை 19 மார்ச் 1988 இல் தொடங்கினார். முன்னெச்சரிக்கையாக “சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது” எனக் கடிதம் எழுதி வைத்தார்.

சாகும் வரை உண்ணாநோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைதுசெய்தது.

ஆயினும், போராட்டம் நிறுத்தப்பட வில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில், சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று காலை 8.45 மணிக்கு அவர் உயிர்நீத்தார்.

மட்டக்களப்பு மண்ணே கண்ணீரில் மூழ்கியது. அன்னையர் முன்னணியினர் அன்னை பூபதியின் உடலைச் சூழ்ந்து ஒப்பாரி வைத்து அழுதனர். அவரின் திருவுடல் முகத்துவாரம் வீதியில் உள்ள சீலாமுனை விளையாட்டு மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து மலர் மாலை, மலரஞ்சலி செலுத்தி வழிபட்டவண்ணம் இருந்தனர்.

என்றாலும் மக்கள் மனதில் ஒரு அச்ச உணர்வும் தென்பட்டது. இந்திய அமைதிப்படையினரின் அச்சுறுத்தலைத் தாண்டியே மக்கள் இறுதி வணக்கத்தை செலுத்தினர்.

பதாகைகளும், அஞ்சலி துண்டுப் பிரசுரங்களும், தமிழ் ஊடகங்களில் முதன்மை செய்தியாகவும் அன்னை பூபதியின் தியாக மரணம் வெளிக்கொணரப்பட்டது .

அன்னை பூபதியின் வித்துடல் 1988 ஏப்ரல் 22 வெள்ளிக்கிழமை வரை முகத்துவாரவீதி சீலாமுனை விளையாட்டு மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக மூன்று நாட்கள் தொடராக வைக்கப்பட்டு 22ஆம் திகதி பிற்பகல் 2.15 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட வாகன ஊர்தியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

சர்வமத பெரியார்கள், பொதுமக்கள், அன்னையர் முன்னணி உறுப்பினர்கள் எனப்பல நூற்றுக்கணக்கானோர் முகத்துவார வீதியூடாக அரசடி சந்தி - கல்முனை வீதியால் கல்லடிப் பாலத்தை கடந்து கடற்கரை வீதி வழியாக நாவலடியை அடைந்து அங்கு மாலை வேளையில் அன்னை பூபதியின் வித்துடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் மண்போட்டு இறுதி மரியாதையை செலுத்தினர். நாவலடியில் இன்றும் அன்னை பூபதியின் நல்லடக்க நினைவிடம் அப்படியே உள்ளது.

கடந்த 2004 டிசம்பர் 26இல் ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தம் சுனாமி தாக்கத்தால் நாவலடி ஊர் முழுமை யாகப் பாதிக்கப்பட்டு பல கட்டங்கள், ஆலயங்கள், சேமக்காலை கல்லறைகள் சேதமாக்கப்பட்டபோதும், அன்னை பூபதியின் கல்லறையில் எந்த சேதங்களும் ஏற்படவில்லை என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இன்றுடன் அன்னை பூபதி மறைந்து 34 ஆண்டுகள் ஆகின்றன. அவர் தியாகம் எம்மைவிட்டுப் பிரியாது. உலக வரலாற்றில் ஒரு பெண் உண்ணாநோன்பு இருந்து உயிர்த்தியாகம் செய்த வரலாறு வேறு எந்த நாட்டிலும் இல்லை. ஈழமணித் திருநாட்டில் மட்டக்களப்பு மண்ணின் 56 வயது நிரம்பிய தாய், தியாகி அன்னை பூபதிக்கு மட்டுமே உண்டு என்பதை அனைவரும் புரிந்து கொள்வோம்.

இன்று 34 ஆம் ஆண்டு நினைவு இடம் பெறும் வேளையில் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், பிரதமரான அவரின் சகோதரர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் அவர்களை பதவி விலக வேண்டு மென அவர்களை ஆதரித்த சிங்கள மக்களே காலிமுகத்திடலில் திரண்டு இரவு பகலாக தொடர் ஆர்ப் பாட்டங்களை நடத்திவருவதைக் காணலாம்.

அன்னை பூபதி அவர் தமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காவே தமது உயிரைத் தியாகம் செய்தார். அவரின் நோக் கம் நிறைவேற கொள்கை தவறாமல் பயணிப்பதே அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

**பா.அரியநேத்திரன்**

# இன்றைய நாளில்...

- ★ 1775 – அமெரிக்கப் புரட்சிப் போர் ஆரம்பித்தது.
- ★ 1782 – அமெரிக்க அரசுத்தலைவர் ஜோன் எடம்ஸ் ஐக்கிய அமெரிக்கா தனி நாடு என்னும் அங்கீகாரத்தை டச்சுக் குடியரசிடமிருந்து பெற்றார். நெதர்லாந்தில் டென்ஹேக் நகரில் உள்ள அவரது வீடு அமெரிக்கத் தூதரகமாக மாற்றப்பட்டது.
- ★ 1818 – பிரான்சிய இயற்பியலாளர் அகஸ்டீன் பிரெனெல் "ஒளியின் விளிம்பு விளைவு" பற்றிய குறிப்பை வெளியிட்டார்.
- ★ 1954 – உருது மற்றும் வங்காள மொழி ஆகியன பாகிஸ்தானின் தேசிய மொழிகளாக அறிவிக்கப் பட்டன.
- ★ 1971 – முதலாவது விண்வெளி ஆய்வுகூடமான சோவியத் ஒன்றியத்தின் சல்யூட்-1 விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- ★ 1975 – இந்தியாவின் முதலாவது செயற்கைக்கோளான ஆரியபட்டா விண்ணுக்கு ஏவப்பட்டது.
- ★ 1988 – இந்திய ஆக்கிரமிப்பாள ருக்கெதிராக மட்டக்களப்பில் 30 நாட்கள் உண்ணா நோன்பிருந்த நிலையில் அன்னை பூபதி இறந்தார்.
- ★ 1995 – சந்திரிகா - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை முறிவடைந்த தாக விடுதலைப்புலிகள் அறிவித்தனர். அதனையடுத்து திருகோணமலைத் துறைமுகத்தில் இரண்டு பீரங்கிக் கப்பல்கள் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன.
- ★ 1999 – ஜேர்மனியின் நாடாளுமன்றம் பெர்லின் நகருக்கு மாற்றப்பட்டது.
- ★ 2006 – நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



# வீதி விபத்துகள் காரணமாக 17 நாட்களில் 128 பேர் பலி




## பண்டிகை நாட்களில் 854 பேர் தேசிய வைத்தியசாலையில் சேர்ப்பு

நமது விசேட செய்தியாளர்

நாட்டில் கடந்த 17 நாட்களில் வீதி விபத்துகள் காரணமாக 128 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இம்மாதம் முதலாம் திகதிமுதல் 17ஆம் திகதி வரையான நாட்களிலேயே இவ்வாறு 128 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 121 விபத்துகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார்சைக்கிள்களே அதிகம் விபத்துக்குள்ளாகியுள்ளதுடன், அதில் பயணித்தோரே அதிக எண்ணிக்கையில் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, பண்டிகை காலத்தில் ஐந்து நாட்களில் மாத்திரம் பல்வேறு விபத்துகளில் பாதிக்கப்பட்ட 854 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இம்மாதம் 11ஆம் திகதிமுதல் 15ஆம் திகதிவரையான காலப்பகுதியில் விபத்துக்குள்ளானோரே சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அனுமதிக்கப்பட்டோரில் 430 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

மேலும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கை மூன்று வீதத்தால் குறைவாகும் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன. அத்துடன், பட்டாசு வெடித்ததன் காரணமாக இருவர் மாத்திரமே தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு அமெரிக்க தூதரகத்தில் நேற்று இடம்பெற்றது. பொருளாதார நெருக்கடிக்கான அரசியல் மறுசீரமைப்பு மற்றும் சிறுபான்மையினர் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### 18.04.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 127 4310 | 138 3003 |
| கனேடியன் டொலர் | 145 3556 | 156 618 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 627 | 41 852 |
| யூரோ | 242 2 16 | 254 342 |
| ஜப்பான் யென் | 1 4548 | 1 5585 |
| சிங்கப்பூர் டொலர் | 128 4133 | 137 572 |
| ஸ்ரேலிங் பவுன் | 312 5725 | 327 5616 |
| சுவிஸ் பிரான்ங் | 233 055 | 246 3413 |
| ஐ.அ.டொலர் | 211 61 0 | 223 8864 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 720 8276 |
| குவைட் | குவைட் தினார் | 0, 17 6524 |
| ஓமான் | ஓமான் றியால் | 703 648 |
| கட்டார் | கட்டார் றியால் | 74 8165 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 72 5320 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 74 2866 |



புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை அமைச்சர்கள் தமது நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்டதன் பின்னர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று (18) அலரி மாளிகையில் வைத்து சந்தித்தனர்.

# ஹிஸ்பு மஜ்லிஸில் பங்குபற்றிய சிறார்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கிவைப்பு



(பீ.எம்.முக்தார்)

புனித ரமழானை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஹிஸ்பு மஜ்லிஸி, பேருவளை சீனன் கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது. இதில், இம்முறை பிரதேசத்தைச் சேர்ந்த 90 வரையிலான சிறுவர்கள் பங்குபற்றுகின்றனர்.

பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி எஸ்.எச்.எம்.இம்ரான் (ஹுமைதி) உதவி இமாம் மௌலவி முஹம்மத் ரிஸ்கி (ஹிழ்ரி) ஆகியோரின் தலைமையில் நடைபெறும் இம்மஜ்லிஸில் பங்குபற்றும் சிறார்களை ஊக்குவிக்கும் வகையில் ரமழான் 14 ஆம் நாள் ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸின்போது மபாஹிம் பாஸி ஒரு சிறுவருக்கு 500 ரூபா வீதம் பண அன்பளிப்பை வழங்கினார்.

புனித ரமழான் மாத இரவுநேரத்தை வீணான கேளிக்கைகளில் சிறுவர்கள் ஈடுபடாது புனித அல்-குர்ஆனை ஓதும் ஹிஸ்பு மஜ்லியில் பங்குபற்றுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

பேருவளை பகுதியிலுள்ள எந்தவொரு பள்ளிவாசலிலும் இவ்வாறான கூடுதலான தொகை சிறுவர்கள் ஹிஸ்புல் குர்ஆன் பங்குபற்றுவதாக அறிவதற்கில்லை. அந்தவகையில் எமது பிரதேச சிறுவர்கள் 90 பேர் வகையில் அல்-குர்ஆன் அருளப்பட்ட புனித மாதத்தில் குர்ஆனை ஓதுவதற்கு ஒன்றுசேர்ந்துள்ளதை பெரிதும் பாராட்டுகிறேன் - என அதிபர் மௌலவி எஸ்.எச்.எம் இம்ரான் (ஹுமைதி) இதன்போது குறிப்பிட்டார்.

இங்கு பங்குபற்றும் சிறார்களை ஊக்குவிக்கும் வகையில் சமூக சேவையாளர் மபாஹிம் பாஸி பண அன்பளிப்பு வழங்குவதையிட்டு பாராட்டுகிறேன். இந்த அன்பளிப்பு புனித அல்-குர்ஆனை கண்ணியப்படுத்துவதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# நடுநிலைமை என்பதும் கள்ளர் கூட்டத்தை ஆதரிப்பதேயாகும்

## வேலுகுமார் எம்.பி. சாடல்



“மக்கள் பக்கமா? கள்ளர்கள் பக்கமா? என்பதே நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதும், எதிர்ப்பதும் ஆகும். நடுநிலைமை என்பதும் கள்ளர் கூட்டத்தை ஆதரிப்பதே” - என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் நாளுக்கு நாள் தன்னெழுச்சிப் போராட்டம் வீரியம்பெற்று வருகின்றது. மக்களின், “கோட்டா போ” என்ற கோஷம் வலுப்பெறுகிறது. “ராஜபக்ஷாக்களை விரட்டி அடிப்போம், கொள்ளையடித்த பணத்தை திரும்பப் பெறுவோம்” என்று பல மட்டங்களிலும் போராட்டங்கள் வெடித்திருக்கின்றன.

ஆனால், அரசாங்கம் தனது வழமையான அசமந்தப் போக்கையும் இழுத்தடிப்பையும் செய்து வருகின்றது. வீதிகளில் மக்கள் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பப் போராடுகின்ற போது, அதற்கு மதிப்பளித்து, அரசியலமைப்பிற்கமைய நாடாளுமன்றத்தில் நாம் அரசை வீட்டுக்கு அனுப்பும் வேலையை செய்யவேண்டியிருக்கின்றது. அதற்காக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

மக்கள் பக்கமா? கள்ளர்கள் பக்கமா? என்பதே நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதும், எதிர்ப்பதும் ஆகும். இதில் நடுநிலைமை எனக் கூறி தலைமறைவாக முடியாது. நடுநிலைமை என்பதும் கள்ளர் கூட்டத்தை ஆதரிப்பதேயாகும்.

இன்று முழு நாடும் போராட்டக் களமாக மாறியிருக்கின்றது. நாளுக்கு நாள் பொருளாதாரம் மீளக் கட்டியெழுப்ப முடியாத அதலபாதாளத்திற்கு சென்றுகொண்டிருக்கிறது. பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றம் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு அதிகரித்துக்கொண்டு இருக்கின்றது. இவற்றுக்கு உடனடித் தீர்வு அவசியம். மக்கள் கேட்பது, ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும், அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும், புதியதொரு இடைக்கால அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்ட வேண்டும் என்பதே. அதற்கான உத்தியோகபூர்வ ஆரம்பமே, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையாகும்.

நாடாளுமன்றத்திலுள்ள ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க கடமைப்பட்டுள்ளனர். இதனை எதிர்ப்பதென்பது நாட்டை புறந்தள்ளி, மக்களை புறந்தள்ளி, இன்று வீதியில் இறங்கிப் போராடும் இளைஞர், யுவதிகளின் கருத்தை, கோஷத்தை ஏளனப்படுத்தி, தமது சொந்த நலனுக்காக செயற்படுவதாகும்.



# சகல எம்.பிக்களையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டால்

## நாட்டின் நிர்வாகத்தை யாரிடம் ஒப்படைப்பது

### கெஹேலிய ரம்புக்வெல்ல எம்.பி. கேள்வி



(கண்டி நிருபர்)

ஜனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்ட 225 பேரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு நாட்டு நிர்வாகத்தை யார் கையில் ஒப்படைப்பது? ஜனாதிபதியின் அதிகாரத்தையும், நாடாளுமன்றத்தையும் கலைத்துவிட்டு ஆட்சியதிகாரத்தை யார் கையில் கொடுப்பது? - முன்னாள் அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல கேள்வி எழுப்பியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றத்தை சட்ட ரீதியாக கையாளவேண்டுமே தவிர, ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுவதுபோல் நாடாளுமன்றத்திலுள்ள 225 பேர் அல்லாத ஒரு குழுவிடம் ஒப்படைக்க முடியாது. எதிர்க்கட்சி கூறுவதுபோல் அரசுக்கு பெரும்பான்மை இல்லாவிட்டால் அவர்கள் பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியை பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு ஆட்சியதிகாரத்தை ஒப்படைப்பதில் எதுவிதத் தடையும் இல்லை. அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்.

அதேநேரம், ஆர்ப்பாட்டம் மற்றும் பலவந்தம் ஊடாக ஆட்சியதிகாரங்களைப் பெற்ற நாடுகளின் இன்றைய நிலையைப் பாருங்கள். ஈரான், ஈராக், சிரியா, லெபனான், லிபியா போன்ற நாடுகளுக்கு தற்போது என்ன நடந்துள்ளது?

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டம் செய்வோர் புத்திசாலிகள் எனக் கூறிக்கொள்கின்றனர். அப்படியாயின் நாடாளுமன்றத்திற்குத் தெரிவானவர்கள் அல்லாத ஒரு குழுவால் ஆட்சியதிகாரத்தை மேற்கொள்ளக்கூடிய வழிமுறை ஏதும் இருப்பின் காட்டித் தாருங்கள். அப்படி ஏதும் இல்லை.

ஜனாதிபதியின் அதிகாரத்தையும், நாடாளுமன்றத்தையும் கலைத்துவிட்டு ஆட்சியதிகாரத்தை யார் கையில் கொடுப்பது? நாடு அராஜகத்திற்கு செல்ல வழி வகுக்க முடியாது - என்றார்.

# பொலிஸாரின் உன்னதச் செயல்





(தலவாக்கலை நிருபர்)

உரிமையாளரின்றி 2 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பணத்துடன் கீழே விழுந்து கிடந்த பணப்பையை ஒன்றினை கண்டெடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அப்பணத்தை அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நுவரெலியா, ஹக்கல சீதையம்மன் கோவில் வளாகத்தில் கடந்த சனிக்கிழமை (16) கீழே விழுந்து கிடந்த பணப்பையை அவ்விடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த நுவரெலியா பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தரான ஆனந்த கிரிஷான் குணரத்ன (பதிவு இலக்கம் 71827) கண்டுபிடித்து உரிமையாளரிடம் ஒப்படைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டதாக நுவரெலியா தலைமை பிரதான பொலிஸ் அதிகாரி பிரேமலால் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கோவில் வளாகத்தில் கிடந்த பணப்பையை அதிகாரி பார்த்தபோது அதில் 2 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பணம் இருந்துள்ளது. அதன் பின்னர் தலைமை பொலிஸ் அதிகாரி பிரேமலால் ஹெட்டியாராச்சியின் பணிப்புரையின்பேரில் நுவரெலியா பொலிஸாரும் உத்தியோகத்தரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையின் பின்னர் கொழும்பு கொள்ளுப்பிட்டி பிரதேசத்திலிருந்து நுவரெலியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த பெண் ஒருவரின் பணப்பை என கண்டு பிடிக்கப்பட்டு அவரிடம் அதனை கையளித்தனர்.

இந்நிலையில், குறித்த பெண்ணை தேடிப்பிடித்து பணத்தை ஒப்படைத்த பொலிஸ் உத்தியோகத்தரின் நேர்மையான செயலை பலரும் பாராட்டியுள்ளனர்.

# புதிய அமைச்சரவை அமைச்சர்கள்



தினேஷ் குணவர்தன



டக்ளஸ் தேவானந்தா



ரமேஷ் பத்திரன



பிரசன்ன ரணதுங்க



திலும் அமுனுகம



கனக ஹேரத்



விதுர விக்கிரமநாயக்க



ஜானக வக்கும்புர



ஷெஹான் சேமசிங்க



மொஹான் பிரியதர்ஷன டி சில்வா



விமலவீர திஸாநாயக்க



காஞ்சன விஜேசேகர



தேனுக விதானகமகே



நாலக கொடஹேவா



சன்ன ஜெயசுமன



நசீர் அஹமட்



பிரமித பண்டார தென்னகோன்

# ஊடகவியலாளரின் தந்தை காலமானார்



'தமிழன்' பத்திரிகையின் பிராந்திய ஊடகவியலாளர் ஆர். சுரேஷ்குமாரின் தந்தை துரைசாமி ராஜரட்ணம் தனது 65ஆவது வயதில் நேற்றுமுன்தினம் (17) காலமானார்.

அன்னாரின் பூதவுடல் தெமோதரையிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை புதன்கிழமை 02 மணியளவில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று தெமோதரை தோட்ட பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆதிவாசிகள் கிராமத்தில் எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு



(கண்டி நிருபர்)

புத்தாண்டு சம்பிரதாயங்களில் ஒன்றான நீண்ட ஆயுளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இடம்பெறும் எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு மஹியங்கனை தம்பானை ஆதிவாசிகள் கிராமத்தில் ஆதிவாசிகள் தலைவன் ஊருகே வன்னியலத்தோ தலைமையில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது.

அதன்போது ஆதிவாசிகள் தலைவன் ஊருகே வன்னியலத்தோ தமது உளைய சகோதரன் குனபண்டியா அத்தோவுக்கு எண்ணெய் தேய்த்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

# விதவைத் தாய்மார்களுக்கு நோன்பு கால உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு






(இக்பால் அலி)

புனித நோன்பு தினத்தினை முன்னிட்டு கண்டி மாவட்டத்திலுள்ள விதவைத் தாய்மார்களுக்கு உலருணவுப் பொதிகள் கட்டுகஸ்தோட்டை மாத்தளை வீதியிலுள்ள சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானத்தில் வழங்கப்பட்டது.

சமகால பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு இந்த உலருணவுப் பொதிகள் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஷ்மியின் தலைமையில் வழங்கப்பட்டன.

இதன்போது மாத்தளை மாவட்ட வை.எம்.எம்.ஏ. பேரவையின் மாவட்ட பணிப்பாளர்களான பௌஸ் ஏ. காதர், கண்டி மாவட்ட பணிப்பாளர் இஹ்திசாம் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

7,500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் விதவை தாய்மார் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

இதில் 10 கிலோ அரசி, பருப்பு. சீனி உள்ளிட்ட பல அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

அதேவேளை, நாடளாவிய ரீதியில் புனித நோன்பு தினத்தை முன்னிட்டு விதவைத் தாய்மார்களுக்காக உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருவதுடன், மேலும் விசேடமாக வறிய குடும்பங்களுக்கும் உலருணவுப் பொதிகள் மற்றும் அரிசிகள் நாடளாவிய வை.எம்.எம்.ஏ. பேரவையின் 150 கிளைகள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

# ஹாவாஎலிய ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த சித்ரா பௌர்ணமி திருவிழா





(நுவரெலியா நிருபர்)

நுவரெலியா ஹாவாஎலிய ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த சித்ரா பௌர்ணமி திருவிழா கடந்த வாரம் வருடப் பிறப்புடனும் சிறப்புப் பூஜைகளுடனும் ஆரம்பமாகின.

இரண்டாம் நாள் நிகழ்வாக கடந்த (15) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு பால்குட பவனி நுவரெலியா லேடிமெக்லம்ஸ் வீதி நீர்வீழ்ச்சியிலிருந்து ஆரம்பமாகி ஊர்வலம் உடபுசல்லாவ வீதி, வைத்தியசாலை வீதி, நவம்கொட கிராமம் வழியாக ஆலயம் வந்தடைந்தது. அதனைத் தொடர்ந்து நவோத்திர சகஸ்கர சத (1008) சங்காபிஷேகம் நடைபெற்று பகல் மகேஸ்வர பூஜையினைத் தொடர்ந்து பத்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை சுவாமி உள்வீதி உற்சவமும் நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு திருவிளக்கு பூஜையுடன் சுவாமி உள் வீதி ஊர்வலம் நடைபெற்று ஆலய முற்றத்தில் விநாயகப் பெருமான், அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் மற்றும் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் பக்தர்களின் அர்ச்சனை பூஜைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு தீ மிதிப்பு நடைபெற்று.

நாட்டு மக்களுக்கும் நாட்டிற்கும் ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகளும் தீ மிதிப்பும் இடம்பெற்றன.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் திருவிழா நடைபெற்றது.

# கண்டியில் இடம்பெற்ற தேசிய எண்ணெய் தேய்க்கும் விசேட ஆராதனை







புத்தாண்டு சம்பிரதாயங்களில் ஒன்றான ஆரோக்கியமான வாழ்வுடன் நீண்ட ஆயுளையும், ஞானத்தையும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் தேசிய சம்பிரதாய எண்ணெய் தேய்க்கும் விசேட ஆராதனை கண்டி புனித நாத்த தேவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே மற்றும் ஆயுர்வேத சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி ஆகியோர் இதில் பங்கு கொண்டனர். (படம்:- கண்டி நிருபர்)

# அரசுக்கு எதிராக யாழில் தீப்பந்தப் போராட்டம்






ஜனநாயகத்திற்காக ஒன்றிணைந்த இளையோர்களின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (17) யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் தீப்பந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பண்ணைக் கடற்கரையில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் அமைதியாக ஆரம்பித்த தீப்பந்தப் போராட்டம் பண்ணைப் பாலத்திலிருந்து பண்ணை சுற்றுவட்டம் வரை பேரணியாகச் சென்றது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தில் "எங்கே எங்கே உறவுகள் எங்கே, சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, கோட்டா அரசே வீட்டுக்குப் போ" போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

குறித்த போராட்டமானது காலிமுகத்திடலில் "கோட்டாபய வீட்டுக்குபோ" என கோஷமெழுப்பியவாறு முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு ஆதரவாக இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டதென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# வாகனங்களை மோதி தப்பிச்சென்ற ஹயஸ்: 7 பேர் படுகாயம்; கடத்தல்காரர்கள் இருவர் கைது!

(வவுனியா நிருபர்)

வவுனியா நகரப்பகுதியில் வேகமாக கிளிநொச்சியிலிருந்து கடத்திவந்த ஹயஸ் ரக வாகனம் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களை மோதித் தள்ளிக் கொண்டு தப்பிச் சென்றதில் 7 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (17) மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ். வீதி ஊடாக ஏ9 வீதியில் வேகமாக கிளிநொச்சியிலிருந்து கடத்திவரப்பட்ட ஹயஸ் ரக வாகனம் வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபர்களை மோதித் தள்ளிவிட்டு நிறுத்தாமல் சென்றதுடன், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக நகரிலிருந்து யாழ். வீதி நோக்கிச் சென்ற இரண்டு முச்சக்கரவண்டிகளையும் மோதித்தள்ளியது.

தொடர்ச்சியாக நிறுத்தாமல் சென்ற குறித்த ஹயஸ் ரக வாகனம், இலுப்பையடிப் பகுதியில் மேலும் ஒரு முச்சக்கரவண்டியினை மோதித்தள்ளியதுடன், அங்கிருந்தும் ஹொரவப்பொத்தானை வீதி வழியாக சென்ற வான் ஒன்றையும் மோதித் தள்ளிவிட்டு தொடர்ந்தும் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதுடன், சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் குறித்த வாகனத்தினை துரத்திச் சென்றனர். பொலிஸாருடன் இணைந்து விசேட அதிரடிப்படையினரும் வாகனத்தினை துரத்திச் சென்றனர்.

அதிவேகமாக சென்ற வாகனம் அநுராதபுரம் மாவட்டத்தின் ஹொரவப்பொத்தானை பகுதியில் வைத்து பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, அதன் சாரதியும் வாகன கடத்தலில் தொடர்புடைய மேலும் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தால் வவுனியா நகரப்பகுதியில் ஆசிகுளம், மடுகந்தை, திருநாவற்குளம், உக்குளாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் மேலும் மூவர் சிறுகாயங்களுடனும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், ஏனைய அசம்பாவிதங்கள் தொடர்பான தகவல்கள் இதுவரை வெளிவரவில்லை.

குறித்த வானின் சாரதி மது போதையில் இருந்துள்ளார் என்றும் மேலும் போதைப் பொருட்கள் எதனையும் கடத்திச் சென்றாரா என்ற கோணத்தில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மண் கொள்ளையர்களின் உழவியந்திரம் மோதி ஒருவர் படுகாயம்

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலாவி தெற்கு ஜே/325 கிராம அலுவலர் பிரிவில் நேற்று (18) திங்கட்கிழமை காலை சட்ட விரோதமாக மண் ஏற்றிச்சென்ற உழவியந்திரம் மோதி நபரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வேலி அடைத்துக்கொண்டு நின்ற நபர் ஒருவர் மீதே இவ்வாறு மண் ஏற்றிச்சென்ற உழவியந்திரம் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பாலாவி தெற்குப் பகுதியைச் சேர்ந்த 40 வயதான அ.சதானந்தன் என்பவரே உழவியந்திரம் மோதி படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

மண் கொள்ளையர்களின் பொறுப்பற்ற நடவடிக்கை காரணமாக பொதுமக்கள் வீதிகளில் நடமாட முடியாத நிலை காணப்படும் அதேவேளை, அவர்களை எதிர்ப்பவர்களின் உடைமைகளை சேதப்படுத்தும் சம்பவங்களும் கடந்த காலங்களில் பாலாவி பகுதியில் இடம்பெற்றிருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மக்கள் வங்கியின் அனுசரணையில் வாழ்வாதார முயற்சிகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்






(வவுனியா நிருபர்)

மக்கள் வங்கியின் அனுசரணையில் வாழ்வாதார முயற்சிகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் வவுனியா இறம்பைவெட்டி கிராமத்தில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது, இறம்பைவெட்டி மற்றும் கருப்பனிச்சங்குளம் கிராமங்களின் அபிவிருத்தியினைக் கருத்திற்கொண்டு முதற்கட்டமாக மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள முயற்சியாளர்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு தொழில்முயற்சிக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டதுடன், வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கான உதவித் திட்டங்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், குறித்த கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாகவும் கிராம மக்களுக்கு தெளிவுபடுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதில், வட பகுதிக்கான அமைச்சுகளின் இணைப்பாளர் கா. சயந்தகுமார், வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர், மக்கள் வங்கி வன்னி பிராந்திய முகாமையாளர், உதவி பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி வவுனியா கிளை முகாமையாளர், மக்கள் வங்கி ஊழியர்கள், இறம்பைவெட்டி மற்றும் கருப்பனிச்சங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினை பிரதிநிதித்துவப் படுத்தும் பிரமுகர்களும் கிராம மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# இரு வாகனங்கள் மின் கம்பத்துடன் மோதி விபத்து



(சாவகச்சேரி நிருபர்)

வேகக் கட்டுப்பாட்டினை இழந்த வாகனங்கள் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளான இருவேறு சம்பவங்கள் தென்மராட்சிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை (16) இரவு பதிவாகியுள்ளன.

கொடிகாமம் - பருத்தித்துறை வீதி ஊடாக பயணித்த வைத்தியர் ஒருவரின் கார் கட்டுப்பாட்டினை இழந்து வீதியோரம் காணப்பட்ட மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளான அதேவேளை, ஏ9 வீதி ஊடாக பயணித்த பொலிஸ் அதிகாரி ஒருவரின் பிக்கப் வாகனம் ஒன்றும் புத்தூர்சந்திப் பகுதியில் கட்டுப்பாட்டினை இழந்து மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இரண்டு விபத்துகளிலும் வாகனங்கள் பலத்த சேதமடைந்தபோதிலும் வாகனங்களில் பயணித்தவர்கள் காயம் ஏதுமின்றி பிழைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கில் பொலிஸார் - பொதுமக்கள் இடைவெளி நிலை மாற்றப்பட வேண்டும்!

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)



வடக்கில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான இடைவெளி நிலையினை மாற்றியமைக்க வேண்டும் - என வடமாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜயசூர்ய நேற்றுக் காலை காங்கேசன்துறையிலுள்ள தனது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்திற்கு இன்று ஒரு சந்தோஷமான நாளாக அமைய வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன். அத்துடன் வடமாகாணத்தில் நல்லிணக்கம், சமாதானத்தை ஏற்படுத்த இலங்கை பொலிஸார் என்ற அடிப்படையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த கடமையினை சரிவர செய்வேன் என உறுதி கூறுகின்றேன்.

வடக்கு பகுதியிலுள்ள மக்களுக்குத் தேவையான விடயங்களை பொலிஸார் என்ற ரீதியில் எங்களால் செய்யக்கூடிய அனைத்து விடயங்களையும் செயற்படுத்த முயற்சி செய்யவுள்ளேன். அதற்குரிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன், வடக்கில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலுள்ள இடைவெளி நிலையினை மாற்றியமைக்க வேண்டும். அந்த இடைவெளி நிலையினை இல்லாமல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுப்பாலத்தை மேம்படுத்துவது கட்டாயமாக செய்யப்பட வேண்டிய விடயம்.

வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்ற ரீதியில் இந்த விடயங்களை நான் மேற்கொள்வதற்கு தயாராக இருக்கின்றேன். வடமாகாணத்திலுள்ள பொலிஸாரின் தேவைகள் குறிப்பாக, சில இடங்களில் பொலிஸ் நிலையங்களுக்கு சொந்த கட்டடங்கள் இல்லை. பொதுமக்களின் காணிகளில் பொலிஸ் நிலையங்கள் இயங்குகின்றன. அவ்வாறான நிலையில் சில மாற்றங்களை கொண்டுவர வேண்டும். குறிப்பாக பொலிஸாருக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகள் மற்றும் கட்டிடம், மின்சாரம் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் நான் பொலிஸ் தலைமை காரியாலயத்துடன் இணைந்து பொலிஸாருக்குரிய அத்தியாவசிய சேவைகள் மற்றும் ஏனைய போக்குவரத்து இதர சேவைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு தயாராகவுள்ளேன்.

வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்ற பொறுப்பு என்னிடம் பொலிஸ் மா அதிபரால் கையளிக்கப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பினை நான் நிறைவேற்றி வடக்கில் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுப்பாலத்தை மேம்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தையும் சிறந்த வாழ்க்கையையும் முன்னெடுப்பதற்கு உறுதுணையாக இருப்பேன். அத்தோடு பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்ற செய்யக்கூடிய சகல விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு தயாராகவுள்ளேன்.

குறிப்பாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர், விவசாயத்துறையில் ஈடுபடுவோர், கல்விச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கும் பொலிஸாராகிய நாம் பூரண ஒத்துழைப்பினை வடக்கு மக்களுக்கு வழங்கத் தயாராகவுள்ளோம் – என்றார்.

# ஓமந்தையில் புகையிரதம் மோதி இளைஞர் மரணம்



கொழும்பிலிருந்து யாழ். நோக்கிச் சென்ற புகையிரதம் வவுனியா, ஓமந்தை, அரச வீட்டுத் திட்டத்திற்கு அண்மித்த பகுதியில் மோதியதில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று (18) காலை 11 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கடுகதி புகையிரதம் ஓமந்தை, அரச வீட்டுத் திட்டத்திற்கு அண்மித்த பகுதியில் பயணித்தபோது தண்டவாளப் பகுதியில் பயணித்த இளைஞர் மீது மோதியதில் குறித்த இளைஞர் மரணமடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் புகையிரதத்தில் எடுத்துச்செல்லப்பட்டு ஓமந்தை புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த விபத்தில் ஓமந்தை அரச வீட்டுத் திட்டம் 6 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த 21 வயதுடைய சுந்தரமூர்த்தி சுதன் என்ற இளைஞரே மரணமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் தற்கொலை முயற்சியா அல்லது விபத்தா என்ற கோணத்தில் ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 'உள்ளம்' காலாண்டு சஞ்சிகை அறிமுக விழா






(வவுனியா நிருபர்)

'உள்ளம்' காலாண்டு சஞ்சிகை அறிமுக விழா வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் கலாநிதி அகளங்கன் தலைமையில் நேற்று சிறப்புற நடைபெற்றது.

நூலை வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் அறிமுகம் செய்ய திரு. திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகள் மற்றும் திரு. திருமதி விஜேந்திரன் தம்பதிகள் நூலின் முதற் பிரதியை பெற்று விழாவைச் சிறப்பித்தனர்.

நூலுக்கான நயவுரையை 35 இலக்கிய செயற்பாட்டாளர்கள் நிகழ்த்தியதுடன், வளர்ந்துவரும் 15 கலைஞர்கள் இணைந்து நிகழ்வை தொகுத்து வழங்கினர்.

நிகழ்வில் 200 வரையான பார்வையாளர்களில் மாணவர்கள் மற்றும் இளம் தலைமுறையினரின் பங்குபற்றல் அதிகமாக இருந்தமை சிறப்பம்சமாகும்.

ஒரு சனசமூக நிலையத்தின் மூலம் சஞ்சிகை வெளிவருவதை பலரும் பாராட்டியிருந்தனர்.

# மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தே அமைச்சுப் பதவியை ஏற்பதற்கு மறுத்தேன்

## நான் மக்கள் பக்கமாக நின்றே செயற்படுவேன் என்கிறார் ஹாரீஸ் எம்.பி.



(மாளிகைக்காடு நிருபர்)

புதிதாக ஸ்தாபிக்கப்படவுள்ள அமைச்சரவையில் அமைச்சுப் பொறுப் பொன்றை பெற்றுக்கொள்ளுமாறு அரச மேலிடங்களிலிருந்து மூன்று தடவைகள் உத்தியோகபூர்வ அழைப்புகள் விடுக்கப்பட்டன. மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், மக்களின் பிரதிநிதி என்றவகையில் மக்கள் பக்கமாக நின்றே செயற்பட வேண்டும் என்று தீர்மானித்ததன் அடிப்படையிலும் அரச தரப்பின் அழைப்புகளை முற்றாக நான் நிராகரித்தேன் - என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹாரீஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

புதிதாக ஸ்தாபிக்கப்படவுள்ள அமைச்சரவையில் எனக்கு முக்கிய அமைச்சுப் பொறுப்பு ஒன்றைத் தர தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அதனை ஏற்றுக்கொள்ளுமாறு மூன்று தடவைகள் ஆளும்தரப்பு உயர்மட்டத்திலிருந்து எனக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டன.

இருப்பினும், அவர்களின் அந்த அழைப்பை நான் நிராகரித்தேன். இன்று மக்கள் பொருளாதார ரீதியாகவும் மற்றும் பல்வேறு வகையிலும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் எந்தவொரு அமைச்சுப் பொறுப்பையும் என்னால் ஏற்க முடியாது என அவர்களிடம் எடுத்துரைத்தேன்.

நாட்டில் இன்று எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி அதனைத் தீர்க்க வேண்டும். மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் நான் மக்கள் பக்கமாக நின்றே செயற்படுவேன்.

இதேவேளை, எம்போன்றோர் தொடர்பில் இன்று பல்வேறு விமர்சனங்கள், குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், உண்மை நிலைமையை மக்கள் விரைவில் உணர்ந்துகொள்வார்கள் - என்றார்.

# 13 வயது சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்தி 10 இலட்சம் ரூபா கப்பம் கோரிய இருவர் கைது




(பாறுக் ஷிஹான்)

13 வயது சிறுமியை வன்புணர்விற்கு உட்படுத்தி வீடியோ ஒன்றினைக் காட்டி 10 இலட்சம் ரூபா கப்பம் கேட்டு நீண்டகாலமாக மிரட்டிவந்த இரு சந்தேக நபர்கள் தலைமறைவாக இருந்த நிலையில், கல்முனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 2022.01.05 அன்று சிறுமியின் தாயாரினால் அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவிலுள்ள சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த 13 வயதான தனது மகளை 3 சந்தேக நபர்கள் வீடியோ காணொளி ஒன்றினை முன்வைத்து கப்பம் கேட்பதாக கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய பொலிஸார் 3 சந்தேக நபர்களையும் அடையாளம் கண்ட நிலையில், தேடுதல் மேற்கொண்டு வந்தனர். எனினும், சந்தேக நபர்களில் ஒருவரான சாய்ந்தமருது 3ஐச் சேர்ந்தவர் டுபாய்க்கு தப்பிச்சென்ற நிலையில் ஏனைய சந்தேக நபர்களில் கப்பம் கோரியவரான மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேக நபர் கல்முனை பகுதி உணவகமொன்றில் வைத்து கைதுசெய்யப்பட்டார். பின்னர் கைதானவரின் தகவலுக்கமைய இச்சம்பவத்திற்கு உடந்தையாக செயற்பட்ட மற்றுமொரு 31 வயதுடைய சந்தேக நபர் சாய்ந்தமருது பகுதியில் வைத்து கைதானார்.

குறித்த இரு சந்தேக நபர்களையும் பொலிஸ் விசேட பிரிவின் தகவலுக்கமைய கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் துரிதமாக செயற்பட்ட கல்முனை குற்றப்புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமை குழுவினர் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இரு சந்தேக நபர்களிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளதுடன், வெளிநாட்டிற்கு தப்பிச்சென்ற சந்தேக நபரை கைதுசெய்ய நீதிமன்றத்தின் ஊடாக சர்வதேச பிடியாணை உத்தரவினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கைதான சந்தேகநபர்கள் கஞ்சா, ஐஸ் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையுடன் சம்பந்தப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

# தம்பலகாமத்தில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு கொடுப்பனவு வழங்கிவைப்பு





(கந்தளாய் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைகளைப் பெற்றுவரும் 25 நபர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று (18) பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜே.ஸ்ரீபதி தலைமையில் இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இக்கொடுப்பனவு 3000 ரூபாவிலிருந்து 5000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டு மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ப.சுதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# முதலாம் தவணைக்காக கிழக்கில் பாடசாலைகள் நேற்று ஆரம்பம்



(அக்கரைப்பற்று நிருபர்)

திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளும் நேற்று (18) ஆரம்பிக்கப்பட்டன.

இம்மாதம் 04ஆம் திகதிமுதல் பாடசாலைகளில் விடுமுறை வழங்கப்பட்ட நிலையில், இவ்வருடத்தின் முதலாம் தவணைக்காக நேற்று (18) மீண்டும் திறக்கப்பட்டன.

அதிகமான மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபர்களும் பாடசாலைகளுக்கு சமுகமளித்த நிலையில் கற்றல் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு கல்வி கோட்டத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலைக்கு மாணவர்கள் ஆர்வத்துடன் நேற்றுக் காலை சமுகமளித்ததை காணமுடிந்தது.

# சம்மாந்துறையில் 89 Born Boys அமைப்பின் இப்தார் நிகழ்வு!







(சம்மாந்துறை நிருபர்)

சம்மாந்துறை பிரதேசத்தில் 89 Born Boys அமைப்பின் நான்காவது வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடுசெய்யப்பட்ட இவ் இப்தார் நிகழ்வு அமைப்பின் தலைவர் எம்.வை.எம்.அனீஸ் தலைமையில் சம்மாந்துறை புரூட் கார்டீன் உணவகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சம்மாந்துறை மற்றும் மாவடிப்பள்ளி எல்லைக்குட்பட்ட 1989ஆம் ஆண்டில் பிறந்த ஆண்கள் அனைவரையும் அங்கத்தவராகக் கொண்டு செயற்படும் இவ்வமைப்பு, இப்தார் ஒன்றுகூடல் மற்றும் டிசம்பர் ஒன்றுகூடல் என இரு பிரதான ஒன்றுகூடல்களை நோக்காக வைத்து செயற்படுகிறது.

இருந்தபோதும் "ஒன்றிணைந்த நண்பர்கள் மூலம் அபிவிருத்தியடைந்த சமுதாயம்" எனும் தொனிப்பொருளில் கடந்த நான்கு ஆண்டுகளில் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான பணத்தினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அங்கத்தவர்களின் தனிப்பட்ட பங்களிப்பு மூலமாக திரட்டி பல சமூகசேவை வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் 44 உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட இவ்வமைப்பானது இன்று 100இற்கு மேற்பட்ட உயிர்ப்பான அங்கத்துவர்களுடன் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கிறது. இருந்தபோதும் 1989இல் பிறந்த இன்னும் பல நண்பர்கள் எமது அமைப்பில் இணைக்கப்பட வேண்டியிருப்பதால் இந்த ஒன்றுகூடலுக்கு கலந்துகொண்ட அனைவரும் எமது அமைப்பின் அடுத்த நிகழ்வில் ஒவ்வொரு புதிய அங்கத்தவர்களையும் அறிமுகம்செய்ய வேண்டுமென்றும் நிர்வாகத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டமை மேலும் குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடு அனுப்புவதாகக் கூறி பணமோசடி; கிண்ணியாவில் பெண்ணொருவர் கைது

(நிலாவெளி நிருபர்)

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாஞ்சோலைச்சேனை பிரதேச தங்குமிடம் ஒன்றில் வைத்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பிவைப்பதாக மோசடியில் ஈடுபட்ட பெண்ணொருவரை கைதுசெய்ததாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கிண்ணியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எச்.சி.கே பெர்னாண்டோ தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது மேற்படி பெண் கைதுசெய்யப்பட்டதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்மணி கொழும்பு வெள்ளவத்தை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைவர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பெண் கிண்ணியா பிரதேசவாசி ஒருவரிடம் அவரது கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டதுடன், மேலும் நால்வரின் கடவுச்சீட்டுகளையும் பெற்றுக்கொள்ள காத்திருக்கும்போது கைதுசெய்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் இரு நபர்களிடம் தலா 50,000 ரூபாவும் மேலும் இரு நபர்களிடம் 1,00,000 ரூபாவும் முற்பணமாக பெற்றுக்கொண்டதுடன், ஜேர்மன், இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதாகவே மேற்படி நபர்களிடம் பணத்தை பெற்றுக் கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும், பணம் கொடுத்த நால்வரும் ஒருநாள் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக கொழும்புக்கு சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது

# நோன்பு கால உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு






(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மஜ்மா நகர் மஸ்ஜித் ரஹ்மா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

புனித நோன்பை முன்னிட்டு மஜ்மா நகர் மஸ்ஜித் ரஹ்மா பள்ளிவாசல் எல்லைக்குள் வசிக்கும் 70 நபர்களுக்கு இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வுலருணவுப் பொதிகள் அப்பகுதி மக்களுக்கு கிடைக்க ஏற்பாடுசெய்த ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர், மஜ்மா நகர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ஏ.எல்.சமீம் ஆகியோருக்கு பள்ளிவாசல் தலைவர் எஸ்.எச்.அஸ்ரப் சிறாஜி நன்றிகளை தெரிவித்துள்ளார்.

# அம்பாறையின் சகல பாகங்களிலும் பெற்றோல், டீசலை பெறுவதற்கு நோன்புடன் வெயிலில் காத்திருக்கும் மக்கள்








(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் எரிபொருள் விநியோகிக்கும் நிலையங்களில் மக்கள் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருள் பெற்றுச்செல்லும் அவலம் தொடர்ந்தும் காணக்கூடியதாக இருக்கின்றது.

அந்தவகையில், அம்பாறை மாவட்ட பல்வேறு பகுதிகளில் எரிபொருள் பெறுவதற்காக மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். அம்பாறை மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் மக்கள் வாகனங்களுடன் மற்றும் கலன்களுடன் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் கடந்த இரு நாட்களாக அதிகாலை 5 மணி தொடக்கம் 500 மீற்றர் தொடக்கம் ஒரு கிலோமீற்றர் வரை நீளத்தில் வரிசையில் காத்திருக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருட்கள் இல்லை. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குள் வாகனங்கள் உட்செல்லவிடாது கயிறுகட்டி மூடியுள்ளனர். சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் பொதுமக்கள் அதிகாலை 5 மணி தொடக்கம் நீண்ட வரிசையில் வாகனங்களுக்கு பெற்றோல், டீசல் பெறுவதற்கும் வீடுகளில் விளக்கு மற்றும் அடுப்பு எரிப்பதற்காக மண்ணெண்ணையை பெறுவதற்காகவும் கலன்களுடன் வெயிலில் காத்துக்கிடக்கின்றனர். பிரதான பாதைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. இதனால் வாகனங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தரித்து நிற்பதுவும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முரண்பாடுகள் ஏற்படுவதும் வழமையாகியுள்ளது.

அந்தவகையில் எரிபொருளை நிரப்புவதற்காக எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகே உள்ள வீதி நீளத்திற்கு வாகனங்கள் தரித்து நிற்பதை அவதானிக்க முடிகின்றது. இதன்போது அங்கு பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## துறைநீலாவணையில் 72 வயது முதியவர் தூக்கிட்டுத் தற்கொலை

(துறைநீலாவணை நிருபர்)

துறைநீலாவணையில் ஆறு பிள்ளைகளின் தந்தையான செல்லையா தங்கராசா (72 வயது) நேற்று முன்தினம் (17) இரவு கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

மன அழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த குறித்த நபர், மீன் வியாபாரத்தினை ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வந்தவர். இவர் ஒருவாரகாலமாக தான் வாழ்வதற்கு விரும்பவில்லை எனவும் எப்படியாவது இறந்துபோக வேண்டும் எனவும் கூறியதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார் இறந்தவரின் உடலை பார்வையிட்டதுடன், மேலதிக விசாரணையினை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடன் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் கலந்துரையாடல்





(பாலமுனை நிருபர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியினை கருத்திற்கொண்டும் 2022 சிறுபோக நெற்செய்கையினை தாமதப்படுத்தாமல் துரிதப்படுத்தலுக்கான ஒழுங்குகளை முன்னெடுக்கும் பொருட்டும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கமைவாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை (16) அட்டாளைச்சேனை பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் சாபிர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், கமநலசேவை நிலைய உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடல் கூட்டத்தின்போது விவசாயிகள் பொதுமக்களின் நலன் கருதி அட்டாளைச்சேனை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவேண்டி பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

பெற்றோல் வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகம் காலை 6 மணிமுதல் பி.ப. 12 மணிவரையும், டீசல் பயன்படுத்தும் வாகனங்களுக்கான (உழவு இயந்திரம் தவிர்ந்த) டீசல் விநியோகம் பி.ப. 3 மணிமுதல் பி.ப. 6 மணிவரையும், விவசாய நடவடிக்கைகளை தங்குதடையின்றி மேற்கொள்ளும் பொருட்டு உழவு இயந்திரங்களுக்கான டீசல் விநியோகம் மாலை 7 மணிமுதல் இரவு 9 மணிவரையான காலப்பகுதிக்குள்ளும், மண்ணெண்ணெய் விநியோகம் இரவு 9 மணிமுதல் நள்ளிரவு 12 மணிவரையும் எரிபொருள் விநியோகம் இடம்பெற வேண்டும் என்றும் இந்த ஒழுங்குவிதிகள் மின்சாரத் தடை காரணமாக மாற்றங்களுக்கு உள்ளானால் அவை மாலை 6.மணிமுதல் ஈடுசெய்யப்படும்.

அத்துடன், பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் வீதி ஒழுங்கு நடவடிக்கை ஒழுங்கமைப்புகளை மேற்கொள்வார்கள். இதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்புகளை வழங்கவேண்டும் என பிரதேச செயலாளர் இதன்போது கேட்டுக்கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

## போடியார் புலம்பல்!



**கோட்டா வீட்டுக்கு போ என்ற வார்த்தை எருமை மாட்டிற முதுகில ஊத்திற தண்ணி போலத்தான் கோட்டபயவும், மகிந்தவும் கணக்கெடுக்கிறதாக காணல்ல எலுவா மந்திரத்தால மாங்காயை உளுத்தாட்டுறது போல இப்ப காலிமுகத்திடலில மந்திரவாதி தொடக்கம் சிங்கள கலைஞர்கள் எல்லாம் அங்க கூக்குரல் இட்டாலும் அந்த கொலைகார கூட்டம் அசையிறதா தெரியல்ல அதுக்குள எங்கட தமிழ் இளைஞர்கள மாட்டி திசைதிருப்ப கொஞ்சப்பேர் ஒத்தக்காலில நிக்காங்க..**

**தமிழர்கள் அதுக்குள போகாம இருக்கிறதான் நமக்கு நல்லது!**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## ஆலையடிவேம்பில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசை

(அக்கரைப்பற்று நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலும் எரிபொருளுக்கான கேள்விகள் அதிகரித்துள்ள நிலையில், எரிபொருள் வழங்கும் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நீண்டவரிசைகளில் மக்கள் காத்திருப்பதை காணமுடிகின்றது.

ஆலையடிவேம்பு பல்நோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று நண்பகல் முதல் பெற்றோலை பெற்றுக்கொள்வதற்காக வரலாறு காணாத அளவிற்கு மோட்டார்சைக்கிள்கள் மற்றும் ஓட்டோ வாகன உரிமையாளர்கள் இரு வரிசைகளில் காத்திருந்ததுடன், நண்பகல் முதல் பெற்றோலை வழங்கும் செயற்பாடுகள் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

ஆயினும் ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களைவிட இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் தமது சேவையினை துரிதமாக முன்னெடுப்பதுடன், காலமறிந்து அதிகளவான ஊழியர்களை கடமையில் இருத்தி எரிபொருள் வழங்கும் செயற்பாட்டை விரைவுபடுத்துவதனால் அதிகமான பொதுமக்கள் விரைவாக எரிபொருளை இங்கு பெற்றுச்செல்வதை காணமுடிகின்றது.



எனினும், மின்சாரம் தடைப்பட்டதன் விளைவாக எரிபொருள் வழங்கும் செயற்பாடுகள் சற்று தாமதமானாலும் பின்னர் ஜெனரேட்டர் மூலமாகவும் எரிபொருள் வழங்கும் செயற்பாடுகள் இடம்பெற்றன.

எது எவ்வாறாயினும் தொடர்ச்சியாக எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நீண்டவரிசைகளில் மக்கள் காத்திருக்கும் நிலையானது பொதுமக்கள் மத்தியில் விசனத்தை உண்டுபண்ணியுள்ளதுடன், மக்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மகனின் தாக்குதலில் தந்தை உயிரிழப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - பாலத்தடிச்சேனை பகுதியில் மகனின் தாக்குதலினால் தந்தையொருவர் உயிரிழந்த சம்பவமொன்று மூதூர் பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு (17) இடம்பெற்றுள்ளது.

மகனின் தாக்குதலினால் மூதூர் - பாலத்தடிசேனை பகுதியைச் சேர்ந்த முருகப்பிள்ளை கைலாசப்பிள்ளை (59 வயது) என்பவரே உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

ஏற்கனவே குடும்பத் தகராறில் மகன் தந்தையை தாக்க முற்பட்ட நிலையில் நேற்றிரவு மதுபோதையில் வந்த மகன் உறங்கிக்கொண்டிருந்த தந்தையை தாக்கியதாகவும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தமை தொடர்பில் சந்தேகத்தின்பேரில் தனது மகனான கே.வினோதன் (29 வயது) என்பவரை கைதுசெய்துள்ளதாகவும் குறித்த பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல மூதூர் நீதிமன்றம் அனுமதி வழங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளது

### நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்

(கிண்ணியா நிருபர்)

ஒழுக்காற்று நடவடிக்கை முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (17) கிண்ணியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளது. இருபதாம் திருத்தச் சட்டத்தின் பின் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள். ஆனால், வழங்கப்பட்டதோ தேசிய அமைப்பாளர் போன்ற பதவிகள். மீண்டும் நிதிச் சட்டமூலம், வரவு-செலவுத் திட்டம் போன்றவற்றில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.




மீண்டும் ஒழுக்காற்று நடவடிக்கை என்றார்கள். நான்கு மாதங்களாக ஒன்றுமில்லை. ஆனால், இன்று அவர்கள் பெசில் ராஜபக்ஷவுடன் அமைச்சுகளுக்காக பேரம் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

நேற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் பிரதி சபாநாயகர் வாக்களிப்பில் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து வாக்களிக்காவிட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார்.

வரவு-செலவுத் திட்டத்தின் பின்னர் கூறிய ஒழுக்காற்று நடவடிக்கையையே இன்னும் காணவில்லை. இதில் தற்போது புதிதாக ஒன்று. அமைச்சுப் பதவிகளுக்கு பேரம் பேசிக்கொண்டிருப்பவர்கள் எவ்வாறு எதிர்க்கட்சிகளுடன் இணைந்து வாக்களிப்பார்கள்.

இது ஒன்றும் ஹக்கீமுக்கு தெரியாமலில்லை. மக்களை ஒழுக்காற்று நடவடிக்கை என்னும் பெயரில் அவரும் ஏமாற்றி வருகிறார் என்பதே உண்மை. ராஜபக்ஷக்கள் எவ்வாறு சிங்கள மக்களை ஏமாற்றி வந்தனரோ அதேபோன்றே முஸ்லிம்களை இந்த முஸ்லிம் கட்சித் தலைவர்கள் ஏமாற்றி வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

## வீதியோர மரங்களினால் போக்குவரத்து பாதிப்பு

(நிந்தவூர் நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, பாண்டிருப்பு ஆகிய இடங்களில் உள்ள உள்ளூர் வீடுகளுக்கு அருகில் வளர்ந்து காணப்படும் மரங்களினால் வீதியில் பயணிகளும், பொதுமக்களும், வாகன சாரதிகளும் பலவிதமான அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக வீதிகளுக்கு அருகாமையிலுள்ள வீடுகள் அமைந்துள்ள பகுதிகளில் நடப்பட்ட மரங்கள் தற்போது வளர்ந்து அவற்றின் கிளைகளும் இலைகளும் வீதியின் மத்திய பகுதிக்கு வந்துள்ளன.

இதனால் விசேடமாக தென்னை மரங்களிலிருந்து திடீரென விழும் தேங்காய், காய்ந்த ஓலைகள், மற்றும் பாளை என்பவற்றால் வீதியில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகி அதனால் உபாதைக்கும் உள்ளாகி வருகின்றனர்.

அத்துடன், வீதி ஓரங்களிலுள்ள மின் கம்பிகள் மற்றும் தொலைபேசி வயர்களில் மரக்கிளைகள் தொட்டுக்கொண்டு காணப்படுவதாலும் சில வேளைகளில் விழுந்த ஓலைகள் இவற்றில் தொங்கிக்கொண்டு காணப்படுவதனாலும் சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ளன.

அண்மையில் இவ்வாறான சம்பவம் ஒன்றினால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியரொருவர் உயிரிழந்தமை யாவரும் அறிந்ததே.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

## சாய்ந்தமருது – மாளிகைக்காடு பிரதேசங்களில் குழந்தைகளின் போஷாக்கு மட்டம் குறைவு

**ஆரோக்கியமான சமூகத்தாலேயே பொருளாதாரமும் மேம்படும் என்கிறார் வைத்தியர் சனூஸ்**

(நிந்தவூர் நிருபர்)

சாய்ந்தமருது – மாளிகைக்காடு பிரதேசங்களில் குழந்தைகளின் போஷாக்கு மட்டம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. உடல் ஆரோக்கியமான சமூகமாக நாங்கள் மாறுவோமாக இருந்தால் பொருளாதார ரீதியிலும் முன்னேற்றமடையலாம்.

இவ்வாறு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மாருக்கான சிகிச்சைக்காக சமூகமளித்திருந்த தாய்மார் மத்தியில் உரையாற்றிய சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இங்கு வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்றினால்தான் நாங்கள் சுகமான ஒரு சமுதாயமாக மலரமுடியும். அந்த சுகமான சமூகம் மலரும்போதே நாங்கள் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பப்படுவோம். பிறக்கும் குழந்தை புத்திகூர்மையாக இருக்கும்போதே நமது சமூகம் வளர்ச்சியடையும். இல்லாவிட்டால் புத்திகூர்மையற்ற சமூகமாகவே நாங்கள் வளருவோம். எமது பிரதேசத்தில் அண்மைக்காலமாக சில நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. அதனை தடுப்பதற்கு உங்களின் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. ஆரோக்கியமாக இருந்தால்தான் குழந்தை புத்திகூர்மையுள்ளதாக இருக்கும். இதற்கு தாய் - சேய் நலன் மிகவும் முக்கியமானது. கர்ப்பகாலத்தில் தாயும் சேயும் போஷாக்கானவர்களாக இருக்கவேண்டும்.

அத்தோடு சுகாதாரமான வாழ்க்கைமுறை, வாழும் சூழல், பிரசவம், பிரசவத்திற்கு பின்னரான நிலைமைகளில் தேகாரோக்கியத்தையும், அப்பியாசங்களையும் எப்படி பேணிக்கொள்ள வேண்டும் என்பதற்காக எமது கருத்துகளுக்கு செவிசாய்க்க வேண்டும்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் போசாக்கு மட்டம் குறைந்த எத்தனையோ தாய்மார் இருக்கின்றார்கள், கர்ப்பிணித் தாய்மாரையும், ஐந்து வயதிற்கிடைப்பட்ட பிள்ளைகளையும் நாங்கள் கணிப்பீடு செய்கின்றோம்.



போஷாக்கு சம்பந்தப்பட்ட விடயத்தில் பொதுவாக எல்லோருக்கும் போதிய விழிப்புணர்வு இல்லையென்பது ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. குறிப்பாக இந்த விடயத்தில் கர்ப்பிணித் தாய்மார் கூடிய அக்கறை எடுக்கவேண்டும். ஆறு மாதங்கள் கடந்த குழந்தைகளுக்கு மற்ற உணவு வகைகளை கொடுங்கள் என்று நாம் வலியுறுத்தினால் கடையில் கிடைக்கும் நவீன உணவுகளையே தாய்மார் நினைவுபடுத்திக் கேட்கின்றார்கள். ஆனால், அவற்றில் ஆரோக்கியமும் போஷாக்கும் இருப்பதில்லை. எமது பாரம்பரிய உணவுகளில் தான் நிறைய போஷாக்கு இருக்கின்றது. விளம்பர உணவுகளை கண்டிராத எமது மூத்தோர் மிகவும் திடகாத்திரமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தளராமல் இருப்பதற்கு அவர்கள் பயன்படுத்திய பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களே காரணமாகும்.

இப்போது 30 அல்லது 35 வயதைக் கடக்கும்போதே எத்தனையோ வகையான உடல் உபாதைகளுக்கு நாம் உள்ளாகின்றோம். இத்தகைய நிலைமைகளுக்கு முக்கிய காரணம் தமது நவீன உணவு பழக்க வழக்கங்கள்தான் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

போஷாக்குள்ள உணவுகளை பெரும் பணச் செலவுசெய்து கடைகளில்தான் வாங்க வேண்டும் என்ற அவசியமில்லை. இயற்கையாகவே எமது சூழலில் கிடைக்கும் உணவுகளைக்கொண்டே நிறை போஷாக்கை நாம் பெற்றுக்கொள்ளலாம்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் தாய்ப்பாலை விட பால்மாவையே தங்கள் குழந்தைகளுக்கு கொடுக்கின்றார்கள். இதுபற்றி எவ்வளவுதான் விளிப்புணர்வு ஏற்படுத்தினாலும், அது அவர்களின் மனதில் ஆழப்பதிந்ததாக தெரியவில்லை. புத்திக் கூர்மையும், ஆரோக்கியமும், சுறுசுறுப்பும், நோய் எதிர்ப்பு சக்தியும் தாய்ப்பாலில் தான் நிறைந்துள்ளது என்பதனை அலுவலகங்களில் கடமைபுரியும் தாய்மார் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# இந்திய செய்திகள்

# காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்காமல் இந்தியாவுடன் அமைதிக்கான சூழல் சாத்தியமில்லை

## பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவிப்பு

பாகிஸ்தானின் புதிய பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தக் கோரி பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.


இந்தியாவுடன் அமைதியான அணுகுமுறையை கடைபிடிக்க விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.



தற்போது இருதரப்பிலுள்ள காஷ்மீர் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் சுமுகத்தீர்வு காணத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமராக பதவியேற்ற ஷெபாஸுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்திருந்த நிலையில் பேச்சுவார்த்தைக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது. பிரதமராகப் பதவியேற்று நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தியபோது ஷெபாஸ் ஷெரீப் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்காமல் இந்தியாவுடன் அமைதிக்கான சூழல் சாத்தியமில்லை என்று தெரிவித்துள்ளார்.

# இளையராஜா பின்வாங்கமாட்டார்



ப்ளூ கிராப் டிஜிட்டல் பவுண்டேசன் நிறுவனம் 'மோடியும் அம்பேத்கரும்' என்ற தலைப்பில் புத்தகமொன்றை வெளியிட்டுள்ளது. இந்தப் புத்தகத்தில் இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா முன்னுரை எழுதியுள்ளார். அது தற்போது சமூக வலைத்தளங்களில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள முன்னுரையில்,

"பிரதமர் நரேந்திர மோடியின் 'மேக் இன் இந்தியா' திட்டம் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது. நாட்டில் வீதிகள், ரயில் போக்குவரத்து, மெட்ரோ ரயில், விரைவு எக்ஸ்பிரஸ் வீதிகள் போன்றவை உலகத் தரத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சமூக நீதியைப் பொறுத்தவரை பல்வேறு சட்டங்களைப் பிரதமர் நரேந்திர மோடி செயற்படுத்தியுள்ளார். முத்தலாக் சட்டம், பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம் - பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் என்ற திட்டமும், பெண்களின் திருமண வயதை உயர்த்த முடிவெடுத்ததும் பெண் சமுதாயத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்லும். இதுபோன்ற நரேந்திர மோடியின் ஆட்சியின் செயற்பாடுகளைக் கண்டு அம்பேத்கரே பெருமைப்படுவார். அம்பேத்கரும், நரேந்திர மோடியும் இந்தியா குறித்து பெரிய கனவு கண்டவர்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இளையராஜாவின் இந்த முன்னுரை தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியையும் அம்பேத்கரையும் ஒப்பிடுவது தவறானது என்று கூறி சமூக வலைத்தளங்களில் இளையராஜாவின் பேச்சுக்குப் பலரும் கண்டனங்களைப் பதிவிட்டு வருகின்றனர். இதேபோன்ற இளையராஜாவின் கருத்திற்கு ஆதரவாகவும் சிலர் பதிவிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த இசையமைப்பாளர் இளையராஜாவின் சகோதரர் கங்கை அமரன், "அம்பேத்கருடன் மோடியை ஒப்பிட்டுப் பேசிய கருத்துக்கு மன்னிப்பு கேட்க முடியாது. தனக்கு எதிரான விமர்சனங்களை ஏற்றுக்கொள்வதாகவும் என்னிடம் இளையராஜா தெரிவித்தார். அத்தோடு மற்றவர்கள் எப்படி கருத்துக் கூறுகிறார்களோ, அதேபோல்தான் கருத்தைக் கூறினேன் என்றார். நான் பதவியை வாங்குவதற்காக மோடியை புகழவில்லை; நான் கட்சிக்காரரும் இல்லை என்றார் இளையராஜா. அம்பேத்கரையும் பிடிக்கும், மோடியையும் பிடிக்கும்; அதனால் ஒப்பிட்டுப் பேசினேன் என்றார் இளையராஜா" - இவ்வாறு கங்கை அமரன் தெரிவித்துள்ளார்.

# இலங்கை அரசின் அத்துமீறலைக் கண்டும் காணாமல் வேடிக்கை பார்க்கிறது மத்திய அரசு

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்; 22 இல் இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்



தமிழக மீனவர்களின் உரிமையைக் காக்கத் தவறிய மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமையை நிலைநாட்ட வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை அரசின் அத்துமீறலைக் கண்டும் காணாமல் மத்திய பா.ஜ.க. அரசு வேடிக்கை பார்க்கிறது. இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்களை கொன்று குவிப்பதற்கு துணைபோன இந்திய அரசு, சர்வதேச நீதிமன்ற குற்றக்கூண்டில் நிறுத்தப்பட வேண்டிய இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசுக்கு உதவிக்கரம் நீட்டி வருகிறது. பொருளாதார நெருக்கடியில் சிக்கி இலங்கை மக்கள் மீள முடியாத துயரத்தில் தவிக்கிறார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசை எதிர்த்து சிங்கள மக்களே கொதித்தெழுந்து தெருக்களில் போராடி வருகின்றனர். இதனால் இந்தியாவிடம் நிதி உள்ளிட்ட எல்லா உதவிகளையும் இலங்கை அரசு கேட்டுப் பெற்று வருகிறது. இந்தியா பத்தாயிரம் கோடி ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது. மேலும் நிதியளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால், ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமையைப் பறித்து, காணிகளை கைப்பற்றி ஆக்கிரமிப்பு செய்து, இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியாகவே வடக்கு, கிழக்குப் பகுதிகளை இன்னமும் சிங்கள இனவாத அரசு கொடுமைக்கு உள்ளாக்கி வருகிறது.

பொருளாதார நெருக்கடியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் குழந்தைகளுக்கு பால் மா கூட வாங்க வழியில்லாமல், ஆபத்தான படகுப் பயணம் செய்து தமிழகத்திற்கு வரத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில், இந்திய அரசு ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழக மீனவர்களை எல்லை தாண்டியதாக கைதுசெய்து, இலங்கை சிறையில் அடைத்து கொடுமைப் படுத்துவதும், நடுக்கடலில் நமது எல்லைக்குள் நுழைந்து தமிழக மீனவர்கள் மீது சிங்களக் கடற்படையினர் கொடூரத் தாக்குதல் நடத்துவதும், இலங்கை கடற்றொழில் சட்டத்தின் கீழ் நமது மீனவர்களைக் கைது செய்து, அந்நாட்டு சட்டப்படி வழக்கு தொடர்ந்து நீதிமன்றத்தில் நிறுத்துவதும், பல இலட்சக்கணக்கான ரூபா தண்டம் விதிப்பதும், மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடிக் கருவிகளை பறிமுதல் செய்வதும் நாள்தோறும் ஏடுகளில் செய்தியாகிவிட்டன.

தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்ட வேண்டும். இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். அவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற்று, கைப்பற்றிய படகுகள் மற்றும் மீன்பிடிக் கருவிகளை ஒப்படைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, மறுமலர்ச்சி தி.மு.க. சார்பில் ஏப்ரல் 22ஆம் திகதி மாலை 4 மணியளவில், இராமேஸ்வரத்தில், தலைமைக் கழகச் செயலாளர் துரைவைகோ தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் - எனத் தெரிவித்துள்ளார்.



சித்திரை திருவிழாவை முன்னிட்டு, மதுரை வைகை ஆற்றில் பச்சை பட்டு உடுத்தி எழுந்தருளிய கள்ளழகர்....

# அரிவாள் மீது நின்று நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்!



கோவில் திருவிழாவின்போது பக்தரொருவர் அரிவாள் மீது நின்று நேர்த்திக்கடன் செலுத்தியுள்ளார்.

தேனி மாவட்டம் போடி அருகே ஜக்கம்ம நாயக்கன்பட்டியிலுள்ள பெருமாள் கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்து. அதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அப்போது நேர்த்திக்கடன் நிகழ்ச்சியின்போது பெருமாள் பக்தர் ஒருவர் இரண்டு பெரிய அரிவாள் மீது தனது இரண்டு கால்களிலும் நின்று, இரத்தம் சொட்டச் சொட்ட வேண்டுதலை நிறைவேற்றினார். இதனைக் கண்டு பக்தர்கள் அனைவரும் வியப்படைந்தனர்.

மேலும், வியாபாரம் மற்றும் விவசாயம் செழிக்க வருடா வருடம் இந்த நேர்த்திக்கடன் செலுத்துவது வழக்கம் என்று அரிவாளில் நின்ற வெங்கடாசலம் தெரிவித்தார்.

# 'கறுப்பு திராவிடன்' பரபரப்பை ஏற்படுத்திய யுவன்



இளையராஜாவின் கருத்து சர்ச்சையை கிளப்பியுள்ள நிலையில் யுவன் சங்கர் ராஜாவின் பதிவு தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மோடியும் அம்பேத்கரும் என்ற புத்தகத்திற்கு இளையராஜா எழுதிய முன்னுரையில் பிரதமர் மோடியை அம்பேத்கருக்கு இணையாக எழுதிய கருத்திற்கு எதிர்ப்பும், ஆதரவும் பெருகி வருகின்றன. இதற்காக இணையத்தளங்களிலும் பெரிய கருத்து மோதல் நடந்து வருகின்றது. மோடி பற்றி எழுதிய என் கருத்தை வாபஸ் பெறமாட்டேன் என்று இளையராஜா தெரிவித்துள்ளதாக அவரது சகோதரர் கங்கை அமரன் தெரிவித்தார்.

இந்நிலையில், அவரது மகன் யுவன் சங்கர் ராஜா தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் 'கறுப்பு திராவிடன், பெருமைக்குரிய தமிழன்' என்று பதிவிட்டிருக்கிறார். அவரின் இந்தப் பதிவு இப்போது பரபரப்பாகியுள்ளது.

# 3 நாள் பயணமாக குஜராத் வந்த உலக சுகாதார அமைப்பின் தலைவர்



உலக சுகாதார அமைப்பின் தலைவர் ஜெனரல் டொக்டர் டெட்ரோஸ் கேப்ரியஸஸ் மூன்று நாட்கள் பயணமாக நேற்று குஜராத் மாநிலம் ராஜ்கோட்டுக்கு வருகைதந்தார்.

ஜாம் நகரில் இன்று உலக சுகாதார அமைப்பின் சார்பில் அமைக்கப்படவுள்ள பாரம்பரிய வைத்திய மையத்தின் நிகழ்ச்சியில் பிரதமர் மோடியுடன் அவர் பங்கேற்கிறார். உலகில் முதன் முறையாக பாரம்பரிய வைத்தியத்துக்கான சர்வதேச மையம் அமைக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேபோல் மொரிஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜூகு நாத்தும் ராஜ்கோட்டுக்கு வருகை தந்துள்ளார். அவரும் பிரதமரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளார்.

# மிஸ் திருநங்கை 2022



மிஸ் திருநங்கை அழகிப்போட்டியில் 150 திருநங்கைகள் கலந்துகொண்டு விதவிதமான உடைகளில் மேடையில் தோன்றி ஒய்யாரமாக நடந்துவந்தனர். சென்னையைச் சேர்ந்த திருநங்கைகள் முதல் மூன்று இடங்களை கைப்பற்றினர்.


கள்ளக்குறிச்சி மாவட் டம் உளுந்தூர்பேட்டை தாலுகா கூவாகம் கிராமத்தில் பிரசித்திபெற்ற கூத்தாண்டவர் கோவில் சித்திரை திருவிழா கடந்த 5ஆம் திகதி சாகை வார்த்தல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக சாமி கண் திறத்தல் நிகழ்ச்சி இன்று நடைபெறவுள்ளது. இதில் திருநங்கைகள் கலந்துகொண்டு கோவில் பூசாரி கையினால் தாலி கட்டிக்கொள்வார்கள். தொடர்ந்து, நாளை (புதன்கிழமை) தேரோட்டம் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் கலந்துகொள்வதற்காக இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான திருநங்கைகள் கூவாகம் கிராமத்தில் குவிந்தனர்.

இந்நிலையில், விழாவின் ஒரு பகுதியான 'மிஸ் திருநங்கை அழகி' போட்டியும் இடம்பெற்றது. 150 திருநங்கைகள் கலந்துகொண்டு விதவிதமான உடைகளில் மேடையில் தோன்றி ஒய்யாரமாக நடந்து வந்தனர்.

அதன்போது இறுதிச்சுற்றுக்கு தெரிவானோரிடம் எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்தும், பொது அறிவுத்திறன் குறித்தும் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. இதில் சிறந்த முறையில் பதிலளித்த சென்னையைச் சேர்ந்த சாதனா, மிஸ் திருநங்கையாக தெரிவுசெய்யப்பட்டார். சென்னையைச் சேர்ந்த மதுமிதா 2ஆவது இடத்தையும், சென்னையைச் சேர்ந்த எல்சா 3ஆவது இடத்தையும் பிடித்தனர்.

# அசாமில் புயல் - மின்னல் தாக்கி 20 பேர் பலி; 95,239 பேர் பாதிப்பு



அசாம் முழுவதும் புயல் மற்றும் இடி, மின்னல் தாக்கியதில் இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

அசாம் மாநிலத்தில் கடந்த மார்ச் இறுதியிலிருந்து இதுவரை புயல் மற்றும் இடி, மின்னல் தாக்கியதில் பலர் உயிரிழந்துள்ளனர். இதுபற்றி அசாம் மாநில பேரிடர் மேலாண் கழகத்தின் தலைமை செயல் அதிகாரி திரிபாதி தெரிவிக்கையில்,


கடந்த 14ஆம் திகதியிலிருந்து 3 நாட்களில் 1,410 கிராமங்களை உள்ளடக்கிய 22 மாவட்டங்களில் புயல் மற்றும் இடி, மின்னல் தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன.

கடந்த 14ஆம் திகதி பலத்த வேகத்துடன் புயல் காற்று வீச தொடங்கியதுடன் இடி, மின்னலும் தாக்கியுள்ளன. இதனால், 95,239 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மாவட்டங்களில் மொத்தம் 1,333 ஹெக்டேயர் நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் சேதமடைந்துள்ளன என தெரிவித்துள்ளார்.

புயலைத் தொடர்ந்து கனமழையும் பரவலாக பெய்து வருகிறது. இதனால், அசாமில் வீடுகள், பாடசாலைகள் மற்றும் அரச, தனியார் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் சாய்ந்தன.

புயல் மற்றும் இடி, மின்னல் தாக்கியதில் 3,011 வீடுகள் முழு அளவிலும், 19,256 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

# ABCD - தமிழ் எழுத்துகளை சரியாக எழுதவில்லை: யுகேஜி மாணவனை அடித்த 3 ஆசிரியர்கள் கைது



சரியாக படிக்கவில்லையென (யுகேஜி) மாணவனை அடித்த 3 ஆசிரியர்களை சென்னை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெரவள்ளூரைச் சேர்ந்த பழனிசாமி - டெய்சி ராணி தம்பதியரின் 6 வயது மகன், பெரவள்ளூரிலுள்ள தனியார் பாடசாலையில் ஆரம்பப் பிரிவில் (யுகேஜி) படித்து வருகிறான். கடந்த 9ஆம் திகதி இந்த சிறுவன் வழக்கம்போல் பாடசாலைக்கு சென்றுள்ளான். பின்னர் காலை 11 மணிக்கு சிறுவனின் தாயாரை தொடர்புகொண்ட பாடசாலை ஆசிரியர், உங்கள் மகன் மயங்கி விழுந்துவிட்டான். எனவே, உடனடியாக பாடசாலை வர வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

அதன்பேரில், சிறுவனின் தாயார் பாடசாலைக்குச் சென்றபோது, சிறுவன் மூச்சுத்திணறலால் அவதிப்படுவதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுபற்றி ஆசிரியர்களிடம் கேட்டபோது, சிறுவன் ABCD மற்றும் தமிழ் எழுத்துகளை சரியாக எழுதவில்லை என்று ஆசிரியர் அடித்தது தெரியவந்தது. உடனே சிறுவனை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்து முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அம்பத்தூரிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

இதுகுறித்து சிறுவனின் தாயார் திருவிக நகர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார். அதன்பேரில், பொலிஸார் 2 பிரிவுகளில் வழக்குப் பதிவுசெய்து, மாணவனை அடித்ததாக ஆசிரியர்கள் 3 பேர் மீதும் வழக்குப் பதிவுசெய்துள்ளனர்.

உலக செய்திகள்

## 55 நாட்களாக தொடரும் போர்:





கருங்கடலில் மூழ்கடிக்கப்பட்ட ரஷ்ய போர்க் கப்பல்

# கீவ் உட்பட முக்கிய நகரங்கள் மீது தொடர் ஏவுகணைத் தாக்குதல்

உக்ரைனின் முக்கிய நகரங்களில் ரஷ்யாவின் அதிரடித் தாக்குதல்கள் தொடர்கின்றன. மரியுபோலில் முக்கிய இரும்பு தொழிற்சாலையை கைப்பற்றிய ரஷ்ய இராணுவம், அங்கிருந்த 2,500 உக்ரைன் வீரர்களிடம் சரணடைந்தால், உயிர் பிச்சை போடுவதாக கெடு விதித்துள்ளது.

நேட்டோவில் இணைய எதிர்ப்பு தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த்தொடுத்தது. சுமார் ஒன்றரை மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் போர் இன்று 55ஆவது நாளை எட்டியுள்ளது.

உக்ரைனின் தலைநகர் கீவ், இரண்டாவது பெரிய நகரான கார்கீவ், இர்பின், செர்னிவ், புச்சா, மரியுபோல், லிவிவ் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் கடும் தாக்குதல் நடத்தி இனப் படுகொலை, பாலியல் துஷ்பிரயோகம், சித்திரவதை போன்ற போர்க் குற்றங்களில் ரஷ்யப் படைகள் ஈடுபட்டதாக உக்ரைன் குற்றம்சாட்டியது.

இதற்கு சாட்சியாக மேற்கண்ட நகரங்களில் உள்ள வீதிகள், குழிகளில் கொத்துக் கொத்தாக சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

கீவ், புச்சா, மரியுபோல் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் ரஷ்யப் படைகள் வெளியேறிய பின்னர், சுமார் 2000இற்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. தலைநகர் கீவ் உள்ளிட்ட சில நகரங்களிலிருந்து ரஷ்யப் படைகள் வாபஸ் பெற்றதால், அங்குள்ள மக்கள் மீண்டும் உயிர் கிடைத்ததுபோல் பெருமூச்சு விட்டனர். இது, சில நாட்களுக்கு கூட நீடிக்கவில்லை. இந்த சூழலில் கிழக்கு உக்ரைனில் ரஷ்ய கிளர்ச்சியாளர்கள் வசிக்கும் டான்பாஸ் பிராந்தியத்தை கைப்பற்ற திட்டமிட்டு, அங்கு பெரும் படைகளை குவித்து திடீர் தாக்குதல்களை ரஷ்ய இராணுவம் நடத்தியது.

அமெரிக்கா, நேட்டோ உள்ளிட்ட மேற்குலக நாடுகள் ஆயுத உதவியால் உக்ரைன் நடத்திய அதிரடித் தாக்குதலால் தலைநகர் கீவ் உள்ளிட்ட நகரங்களில் ரஷ்யா நுழைய முடியாமல் திணறி பின்வாங்கியது. இந்த ஆக்ரோஷம் கிழக்கு உக்ரைனிலும் தொடர்ந்தது.

இந்நிலையில், உக்ரைன் ஏவுகணைத் தாக்குதலில் கருங்கடலில் நிறுத்தப்பட்டிருந்த ரஷ்யாவின் மிகப்பெரிய போர்க் கப்பல் அழிக்கப்பட்டது. மேலும், ரஷ்யா எல்லைகள் புகுந்து உக்ரைன் விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் குடியிருப்புகள் மீது சரமாரி குண்டு வீசப்பட்டது. இந்த இரு தாக்குதல்களால் ஆத்திரமடைந்த ரஷ்யா, உக்ரைன் தலைநகர் கீவ் உட்பட அனைத்து முக்கிய நகரங்களின் மீதும் மீண்டும் ஏவுகணைத் தாக்குதலை தொடங்கியிருக்கிறது.


அதன்படி, கடந்த 2 நாட்களாக தலைநகர் கீவ் மற்றும் கிழக்கு, மேற்கு, தெற்கு உக்ரைனிலுள்ள 8 முக்கிய நகரங்களை குறிவைத்து ரஷ்யா ஒரே நேரத்தில் பலமுனை தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது. இதனால், பல இடங்களில் மக்கள் தூக்கத்தை தொலைத்து, ஒவ்வொரு முறை குண்டு சத்தங்கள் கேட்கும் போதெல்லாம் உயிரை கையில் பிடித்துகொண்டு பாதுகாப்பான இடத்தை தேடி நகருகின்றனர்.

அவ்வாறு செல்லும் அப்பாவி மக்களையும் ரஷ்யப் படைகள் சுட்டுக் கொல்கின்றன. இதனால், பாடசாலைகள் மற்றும் பதுங்கு குழிகளில் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர். இந்த நகரங்களில் ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இராணுவ ஆலை, வெடிமருந்து ஆலை, எண்ணெய் ஆலை என்பன வெடித்து சிதறி தீப்பிடித்து எரிகின்றன.

கார்கீவ் நகரிலுள்ள குடியிருப்புப் பகுதியில் வீசப்பட்ட ரொக்கெட்டுகளால் ஒரு குழந்தை உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர். கீவ்வின் டார்னிட்ஸ்கி மாவட்டத்திலுள்ள இராணுவ கவச வாகனங்கள் ஆலை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இங்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வழங்கிய நீண்ட தூர இலக்கை துல்லியமாக தாக்கக்கூடிய ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. இந்த தாக்குதல் கிழக்கில் முன்னேறும் ரஷ்யாவுக்கு பலமாக அமைந்துள்ளது. இயல்பு நிலை திரும்பி கொண்டிருந்ததால், கீவ்வில் வெளிநாட்டு தூதரகங்கள் மீண்டும் திறக்க திட்டமிட்டனர். ஆனால், ரஷ்யப் படைகளின் அதிரடித் தாக்குதலால் திட்டத்தை கைவிட்டனர்.

மேற்கு உக்ரைனிலுள்ள எல்விவ் பிராந்தியத்தில் பெலாரஸிலிருந்து புறப்பட்ட ரஷ்ய எஸ்யூ-35 விமானம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. கார்கீவ் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு சமூக சமையலறை அழிக்கப்பட்டது. இங்கிருந்துதான் சுமார் 30 நகரங்களிலுள்ள 3 இலட்சம் பேருக்கு உணவு வழங்கப்பட்டு வந்தது. ரஷ்ய விமானத் தாக்குதல்களில் கிழக்கில் சீவிரோடோனெட்ஸ்க் அருகே உக்ரைனின் வான் பாதுகாப்பு ரேடார்கள் மற்றும் பிற இடங்களிலுள்ள பல வெடிமருந்து கிடங்குகளும் அழிக்கப்பட்டன. 2 நாட்களாக நடத்தப்பட்டு வரும் தாக்குதலில் நூற்றுக்காணக்கானோர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

துறைமுக நகரமான மரியுபோலை கைப்பற்றினால், டான்பாஸ் பகுதியில் ஏற்கனவே உள்ள வீரர்களுடன் இணைந்து முழுமையான தாக்குதலை நடத்த முடியும் என்று ரஷ்யா கருதுகிறது. இதனால் மரியுபோல் மீது இடைவிடாமல் தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரைனின்




கட்டுப்பாட்டிலுள்ள அசோவ்ஸ்டல் இரும்பு தொழிற்சாலையை ரஷ்யப் படைகள் சுற்றிவளைத்துள்ளன. இங்கு சுமார் 2,500 உக்ரைன் வீரர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் ஆயுதங்களை கீழே போட்டு சரணடைந்தால், உயிர் பிச்சை அளிப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. இந்த நகரம் எந்த நேரத்திலும் ரஷ்யாவிடம் வீழ்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. இலட்சக்கணக்கான மக்கள் இருந்த மரியுபோலில் தற்போது வெறும் ஆயிரக்கணக்கான மக்கள் மட்டுமே வசிக்கின்றனர். அவர்களையும் விடாமல் சுட்டுக் கொல்ல ரஷ்ய இராணுவம் முயற்சித்து வருவதாக உக்ரைன் குற்றம்சாட்டியுள்ளது.

**உக்ரைனின் 470 ட்ரோன்கள் அழிப்பு**

உக்ரைனில் இராணுவ நடவடிக்கையை தொடங்கிய நாள் முதல் அந்நாட்டுக்கு சொந்தமான 470 ட்ரோன்களை தாக்கி அழித்திருப்பதாக ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

136 விமானங்கள், 249 விமான ஏவுகணை தடுப்பு அமைப்புகள், 2 ஆயிரத்து 308 டாங்குகள் மற்றும் கவச போர் வாகனங்கள், 254 பல ஏவுகணை தாக்குதல் அமைப்புகள், 998 பீரங்கி துப்பாக்கிகள் மற்றும் சிறிய பீரங்கிகள், 2,171 சிறப்பு இராணுவ வாகனங்கள் உள்ளிட்டவற்றையும் தாக்கி அழித்திருப்பதாக ரஷ்யப் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இகோர் கோனாஷென்கோவ் (igor konashenkov) தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் 4 இராணுவக் கட்டளை மையங்கள், 4 பீரங்கி பெட்டரிகள், 2 எரிபொருள் கிடங்குகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட உக்ரைனிய இலக்குகளை ரஷ்ய படைகள் அழித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**48 இலட்சம் பேர் அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம்**

உக்ரைனிலிருந்து இதுவரை 48 இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் போர் தொடுத்த முதல் தற்போது வரை 48 இலட்சத்து 69ஆயிரம் பேர் உக்ரைனிலிருந்து அகதிகளாக வெளியேறியுள்ளனர் என ஐ.நா. அகதிகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் அண்டை நாடான போலந்தில் குடியேறியுள்ளனர். கடந்த 2020ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, உக்ரைன் நாட்டு மக்கள் தொகை 44.13 மில்லியனாக இருந்ததாகவும், அதில் தற்போது 10சதவீதம் பேர் அகதிகளாக வெளியேறி விட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**ரஷ்ய தளபதி பலி**

மரியுபோலில் இடம்பெற்ற மோதலில் ரஷ்யாவின் 8ஆவது இராணுவ பிரிவின் துணைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் விளாடிமிர் ப்ரோலோவ் உயிரிழந்தார். இவரது உடல் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. போரில் இதுவரை பல ரஷ்ய தளபதிகள், 12இற்கும் மேற்பட்ட பிற உயரதிகாரிகள் கொல்லப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

**'ஈஸ்டர் போர் நிறுத்தம்' - போப் பிரான்சிஸ் அழைப்பு**

வத்திக்கானிலுள்ள செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவில் நடந்த ஈஸ்டர் பிரார்த்தனையில் உக்ரைனின் மெலிடோபோல் மேயர் மற்றும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் பேசிய போப் பிரான்சிஸ், 'ஒரு ஈஸ்டர் போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை அடையவேண்டும்' என்று அழைப்பு விடுத்தார்.

**ஆயுதம் வழங்குக**

''மரியுபோலின் நிலைமை மனிதாபிமானமற்ற நிலையில் உள்ளது. ரஷ்யா வேண்டுமென்றே அங்குள்ள அனைவரையும் அழிக்க முயற்சிக்கிறது. மரியுபோலை காப்பாற்ற உக்ரைனுக்கு மேற்கத்தேய நாடுகளின் கூடுதல் ஆதரவு தேவை. எங்களுக்கு தேவையான கனரக ஆயுதங்கள், விமானங்களை உடனடியாக வழங்குங்கள். இதன்மூலம், மரியுபோல் மீதான ஆக்கிரமிப்பாளர்களின் அழுத்தத்தை குறைக்கலாம். படையெடுப்பை உடைக்கலாம்' - இவ்வாறு உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**ரஷ்ய கப்பல்களுக்கு கருங்கடலில் தடை**

ரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் பல்வேறு தடைகளை விதித்துள்ளது. இந்நிலையில், ரஷ்யக் கொடியுடன் கூடிய கப்பல்கள் கருங்கடல் துறைமுகங்களுக்குள் நுழைவதை பல்கேரியா, இத்தாலி தடை விதித்துள்ளன. ஆபத்திலிருக்கும் கப்பல்கள் அல்லது மனிதாபிமான உதவியை நாடும் கப்பல்கள் அல்லது எரிசக்தி பொருட்கள், உணவு மற்றும் மருந்துகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு கொண்டு செல்லும் கப்பல்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## சூடுபிடிக்கும் பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தல்: மெக்ரோன் - பென் இடையே கடும் போட்டி



பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தல் உக்ரைன் போரின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் இம்மானுவேல் மெக்ரோன், தீவிர வலதுசாரி வேட்பாளர் மரின் லீ பென் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதி பதவிக்கான இரண்டாம் கட்டத் தேர்தல் ஏப்ரல் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. ரஷ்யாவுடன் நெருங்கிய நட்பு கொண்ட தீவிர வலதுசாரியான மரின் லீ பென் வென்றால் உக்ரைனில் ரஷ்யாவுக்கு எதிரான மேற்கத்தேய முயற்சிகளைக் குறைக்கக் கூடும்.

மெக்ரோன் அரசு உக்ரைனுக்கு 825 கோடி ரூபா மதிப்புள்ள ஆயுதங்களை வழங்கியுள்ளது. லீ பென் வென்றால் உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவது நிறுத்தப்படக்கூடும். ரஷ்யாவிலிருந்து எண்ணெய் எரிவாயு இறக்குமதிக்குத் தடை விதித்ததை ஏற்கெனவே லீ பென் எதிர்த்துள்ளார்.

அதனால் ரஷ்யா மீது விதித்துள்ள தடையை நீக்குவதுடன், கிரிமியாவை ரஷ்யாவின் ஒருபகுதியாக அங்கீகரிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தென்னாபிரிக்காவில் வெள்ளம் – மண்சரிவு: உயிரிழந்தோரின் எண்ணிக்கை 443ஆக உயர்வு

தென்னாபிரிக்காவின் டர்பன் மாகாணத்தில் கொட்டித் தீர்த்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 443ஆக உயர்ந்துள்ளது.

கடற்கரை நகரமான டர்பன் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கடும் மழை பெய்ததால், வீதிகள், மேம்பாலங்கள், துறைமுகம் உள்ளிட்ட கட்டமைப்புகள் மிக மோசமாக சேதமடைந்துள்ளன.

40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஏராளமான மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

## லிபியாவில் படகு விபத்து: 35 அகதிகள் உயிரிழப்பு



லிபியா அருகே அகதிகள் படகுகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 35 பேர் உயிரிழந்தனர். இது குறித்து ஐ.நா. அகதிகள் நல அமைப்பு தெரிவிக்கையில்,

லிபியாவின் கடலோர நகரான சப்ரதா அருகே கடலில் சென்றுகொண்டிருந்த அகதிகள் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 35 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். அவர்களில் 06 பேரது உடல்கள் மட்டும் மீட்கப்பட்டன.

சப்ரதா நகரிலிருந்துதான் ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் பெறுவதற்காக ஏராளமான அகதிகள் மத்தியதரைக் கடல் வழியாக ஆபத்தான பயணத்தை மேற்கொள்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் மட்டும் லிபியா வழியாக ஐரோப்பிய நாடுகளை நோக்கிச் சென்ற 53 அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். இந்த மாதத் தொடக்கத்தில், அளவுக்கு அதிகமான அகதிகளை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் 90இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

## வடகொரியா நவீன ஏவுகணை சோதனை

அணுகுண்டுகளை சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் நவீன ஏவுகணை சோதனையை வட கொரியா மேற்கொண்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடன் வட கொரியா மோதல் போக்கை கொண்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்றதிலிருந்து இதுவரை, வடகொரியா 13 ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளது. கடந்த மாதம் அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகளையும் தாக்கும் திறன் படைத்த, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஏவியது.

வடகொரியாவின் ஆயுத தொழில்நுட்பங்களும், அணு ஆயுத பலம் பெறும் முயற்சியும் உலக நாடுகளின் கவலையை அதிகரிக்க செய்துள்ளது.

இந்நிலையில், அணுகுண்டுகளை சுமந்து சென்று தாக்கக்கூடிய நவீன ஏவுகணை சோதனையை வடகொரியா நேற்றுமுன்தினம் நடத்தியது. இதை இந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங் உன் பார்வையிட்டார். வடகொரியா விரைவில் அணு ஆயுத சோதனையை மீண்டும் தொடங்கும் என்பதையே இந்த அறிவிப்பு குறிப்பதாக அமெரிக்கா, தென் கொரியா போன்ற நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன.

# எதிரிகளை நண்பர்களாக்கிய ஐ.பி.எல்.

**சர்வதேச கிரிக்கெட்டில் தங்கள் நாட்டுக்காக விளையாடும்போது சண்டை போட்டுக்கொண்ட வீரர்கள் நாளடைவில் காலத்தின் சுழற்சியால் நண்பர்களாக மாறிய கதைகளும் உள்ளன. ஏதோவொரு காரணத்துக்காக சண்டை போட்டுக்கொண்ட அந்த வீரர்களை நண்பர்களாக மாற்றி ஒன்றாக ஒரே அணியில் கட்டிப்பிடித்து வெற்றியை கொண்டாடும் அளவுக்கு மாற்றங்களை நிகழ்த்தும் வல்லமை ஐ.பி.எல். தொடருக்கு உள்ளது. அந்தவகையில் எதிரிகளாக இருந்து ஒரே அணியில் விளையாடிய வீரர்கள் தொடர்பில் பார்க்கலாம்.**



**ஹர்பஜன் – சைமன்ஸ்**

2008ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய மண்ணில் நடந்த டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய வீரர் ஆண்ட்ரு சைமண்ட்சை குரங்கு என இந்திய வீரர் ஹர்பஜன் சிங் திட்டியதாக எழுப்பப்பட்ட புகார் உலகளவில் மிகப்பெரிய சர்ச்சையாக வெடித்தது. அதன் காரணமாக இந்திய வீரர் ஹர்பஜனுக்கு ஒரு போட்டியில் தடை விதிக்கப்பட்ட நிலையில், அதற்கு பி.சி.சிஐ எதிர்ப்புத் தெரிவித்ததால் அது விலக்கிக்கொள்ளப்பட்டது. அதன் காரணமாக எலியும் பூனையுமாக மாறிய அந்த ஜோடி, ஐ.பி.எல். தொடரில் மும்பை, டெக்கான் சார்ஜர்ஸ் ஆகிய அணிகளுக்காக மீண்டும் எதிரிகளாக விளையாடியது.

அந்த நிலையில் 2011ஆம் ஹர்பஜன் சிங் இடம்பெற்றிருந்த மும்பை இந்தியன்ஸ், ஆண்ட்ரு சைமண்ட்சை வாங்கியது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதன்பின் நாட்டுக்காக விளையாடியபோது போட்டுக்கொண்ட சண்டையை மறந்த இந்த ஜோடி ஒன்றாக ஒரே அணியில் விளையாடியதைப் பார்க்க முடியும் என ரசிகர்கள் கனவிலும் கூட நினைத்திருக்க மாட்டார்கள்.



**ஹர்பஜன் – பொண்டிங்**

அதே மங்கிகேட் சர்ச்சையின்போது தனது அணி வீரர் சைமன்சை திட்டிய ஹர்பஜன் சிங்கை தடைசெய்ய வேண்டும் என்று அவுஸ்திரேலிய தலைவராக இருந்த ரிக்கி பொண்டிங் திட்டவட்டமாக தெரிவித்திருந்தார். அத்துடன், ஏற்கனவே டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது விக்கெட்டை அதிகமுறை எடுத்த சாதனை படைத்த ஹர்பஜன் சிங்கை நாட்டுக்காக விளையாடும்போதெல்லாம் அவர் ஓர் எதிரியாக பாவித்து வந்தார். கடந்த 2013ஆம் ஆண்டு அதேபோல் மும்பை அணியில் இவர்கள் ஒன்றாக விளையாடுவார்கள் என்று பல ரசிகர்களும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

அந்த தருணத்தை சாத்தியமாக்கி காட்டிய ஐ.பி.எல். ஒரு போட்டியில் ஹர்பஜன் வீசிய பந்தில் கிடைத்த கேட்ச்சை ஸ்லிப் பகுதியில் சுப்பர் மேனைபோல் ரிக்கி பொண்டிங் தாவிப் பிடித்ததை பார்த்த ஹர்பஜன் அவரை கட்டிப்பிடித்து பழைய பகையை மறந்து நண்பர்களாக மாறியது என்றும் மறக்க முடியாது.

**வார்னர் – பேர்ஸ்டோ**

அனல் பறக்கும் ஆஷஸ் தொடரில் தங்களது நாட்டுக்காக விளையாடியபோது அவுஸ்திரேலியாவின் டேவிட் வார்னர், இங்கிலாந்தின் ஜானி பேர்ஸ்டோ ஆகியோர் ஒரு கட்டத்தில் கடுமையாக ஸ்லெட்ஜிங் செய்துகொண்டு எதிரிகளாக இருந்தனர். ஆனால், 2019ஆம் ஆண்டு இவர்களை ஹைதராபாத் அணியில் இணைத்த ஐ.பி.எல். ஒரே அணியில் விளையாட வைத்தது. அதன் காரணமாக பழையதை மறந்த இந்த ஜோடி அதுவும் ஓபனிங் பேட்ஸ்மேன்களாக களமிறங்கி



எதிரணிகளைப் பந்தாடி வெற்றிகளைக் குவித்தது. கடந்த 2021 வரை ஒன்றாக விளையாடிய இந்த ஜோடி ஐ.பி.எல். கிரிக்கெட் வரலாற்றில் அதிகபட்ச ஓட்டங்களைப் பதிவுசெய்த ஓப்பனிங் ஜோடி (185 ஓட்டங்கள்) என்ற சாதனையும் படைத்துள்ளது.



**அஷ்வின் – பட்லர்**

இந்தியாவின் அஷ்வின், இங்கிலாந்தின் பட்லர் ஆகியோர் ஐ.பி.எல். தொடரில் சண்டை போட்டு அதே ஐ.பி.எல். தொடரால் தற்போது இணைத்துள்ளனர். கடந்த 2019ஆம் ஆண்டு அஷ்வின் ராஜஸ்தானுக்கு விளையாடிய பட்லரை மன்கட் செய்ததை பற்றி பெரிதாக கூறவேண்டியதில்லை. அதனால் எதிரும் புதிருமாக இருந்த இவர்கள் அவர்களே எதிர்பாராதவண்ணம் இம்முறை ராஜஸ்தான் அணிக்காக விளையாடும் சங்கடமான நிலை ஏற்பட்டது. இருப்பினும் பழையதை மனதில் வைத்துக்கொள்ளாத இந்த ஜோடி தற்போது ராஜஸ்தானுக்காக ஒன்றாக சிரித்த முகத்துடன் விளையாடுவது ரசிகர்களை கவர்ந்து வருகிறது.



**பாண்டியா – ஹூடா**

கடந்த 2021இல் உள்ளூர் கிரிக்கெட்டில் பரோடா அணிக்காக விளையாட இருந்தபோது அதன் தலைவர் க்ருனால் பாண்டியா தன்னை கெட்ட வார்த்தைகளால் திட்டியதாக அதே அணியைச் சேர்ந்த இளம் வீரர் தீபக் ஹூடா குற்றஞ்சாட்டியது ரசிகர்களை அதிர வைத்தது. அதன்பின் பரோடா அணியில் தடை செய்யப்பட்ட ஹூடா ராஜஸ்தானுக்கு குடிபெயர்ந்து இந்திய அணிக்காக விளையாடும் அளவுக்கு உயர்ந்தார்.

இந்நிலையில், இந்த வருடம் புதிதாக உருவாக்கப்பட்ட லக்னோ அணி நிர்வாகம் ஏலத்தின்போது அவர்களை ஜோடியாக வாங்கியது. அதன்பின் இந்தாண்டு ஐ.பி.எல். தொடரின்போது இவர்கள் சண்டை போட்டுக்கொள்வார்கள் என எதிர்பார்த்த ரசிகர்களுக்கு முதல் போட்டியிலேயே ஒரு விக்கெட் விழுந்தபோது கட்டிப்பிடித்துக் கொண்டாடிய இந்த ஜோடி ஆச்சரியத்தைக் கொடுத்து தற்போது ஒன்றாக அண்ணன் தம்பியைபோல் விளையாடிவருகிறது.

# வரலாற்றுச் சாதனையில் இணைந்த உம்ரான் மாலிக்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் வேகப்பந்துவீச்சாளர் உம்ரான் மாலிக் வரலாற்றுச் சாதனையில் இணைந்துள்ளார்.

பஞ்சாப் கிங்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகு வெற்றிபெற்று வரிசையாக நான்கு வெற்றிகளை சுவைத்து புள்ளிப்பட்டியலில் 8 புள்ளிகளை பெற்றுள்ளது.

குறித்த போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் 20ஆவது ஓவரை வீசிய உம்ரான் மாலிக், அசுர வேகத்தில் பந்துவீசினார். முதல் பந்தில் டாட், 2ஆவது பந்தில் விக்கெட், 3ஆவது பந்தில் டாட், 4ஆவது பந்தில் விக்கெட், 5ஆவது பந்தில் விக்கெட், 6ஆவது பந்தில் ரன்அவுட் என ஒரே ஓவரில் 4 விக்கெட் வீழ்ந்தது. இதன் மூலம் ஒரு ஓவரில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தி ஓட்டங்கள் எதுவும் விட்டுக்கொடுக்காமல் மெய்டன் வீசிய வீரர் என்ற பெருமையை உம்ரான் மாலிக் படைத்தார்.

இதன் மூலம் 15 வருட ஐ.பி.எல். வரலாற்றில் இறுதி ஓவரில் அதாவது, 20ஆவது ஓவரை மெய்டன் ஓவராக வீசிய 4ஆவது வீரர் என்ற பெருமையை உம்ரான் மாலிக் பெற்றார்.

SRH vs PBKS போட்டியை காண

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# திருமலை மாவட்டத்திற்கு 12 தங்கப் பதக்கங்கள்





(கந்தளாய் நிருபர்)

2022ஆம் ஆண்டுக்கான வடக்கு, கிழக்கு மாகாண கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சுமார் 400 போட்டியாளர்கள் பங்குபற்றினார்கள்.

திருகோணமலை டிஜோ சார்பாக 32 போட்டியாளர்கள் பங்குபற்றினர். இதில், காட்டா ஆண்கள் பிரிவில் 3 தங்கம், 3 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்களையும், குமிட்டே ஆண்கள் பிரிவில் 3 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களையும், காட்டா பெண்கள் பிரிவில் 3 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களையும், குமிட்டே பெண்கள் பிரிவில் 4 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலம் பதக்கங்களை வென்று திருகோணமலை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

ஒட்டுமொத்தமாக திருகோணமலை மாவட்ட வீர, வீராங்கனைகள் 12 தங்கப் பதக்கங்களையும், 9 வெள்ளிப் பதக்கங்களையும், 14 வெண்கலப் பதக்கங்களையும் வென்றனர்.

## யாழ். மாவட்ட சதுரங்க சங்கத்தின் ஏற்பாட்டில் நொர்தேர்ன் செஸ் ப்ரீமியர் லீக் சுற்றுப்போட்டி







(யாழ். நிருபர்)

யாழ். மாவட்ட சதுரங்க சங்கத்தின் ஏற்பாட்டில் நொர்தேர்ன் செஸ் ப்ரீமியர் லீக் சுற்றுப்போட்டி கடந்த இரு நாட்களாக யாழ்ப்பாணம் நாச்சிமார்கோவில் வீதியில் அமைந்துள்ள பூட் கலரியில் இடம்பெற்றது. யாழ்ப்பாணம், கண்டி, காலி மற்றும் கொழும்பிலிருந்து பல சதுரங்க வீர, வீராங்கனைகள் இந்த சுற்றுப்போட்டியில் பங்குபற்றியிருந்தனர்.

யாழ். மாவட்ட சதுரங்க சங்கத்தின் தலைவர் என். நந்தரூபன் தலைமையில் நேற்று முன்தினம் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக இந்திய பதில் துணைத்தூதர் ஸ்ரீ வி. ராம் மகேஷும், விருந்தினராக ஐ.பி.சி. தமிழ் குழுமத்தின் தலைவர் கே. பாஸ்கரனும் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

சுற்றுப்போட்டியின் முதலிடத்தைப் பெற்ற அணிக்கு ரூ. ஒரு இலட்சம் பணப்பரிசிலும் இரண்டாம் இடத்தைப் பெற்ற அணிக்கு ரூ. 75 ஆயிரம் பணப்பரிசிலும் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

# மாலிங்கவை நெருங்கும் புவனேஸ்வர்



பஞ்சாப் கிங்ஸ் அணியுடன் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் வேகப்பந்துவீச்சாளர் புவனேஸ்வர் குமார் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதன்மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் 150 விக்கெட் வீழ்த்திய முதல் இந்திய வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையை எட்டினார்.

அத்துடன், ஒட்டுமொத்த வேகப்பந்து வீச்சாளர்களில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடிவரும் சகலதுறை வீரர் டுவைன் பிராவோ (174), மும்பை இந்தியன்ஸ் அணியின் முன்னாள் வீரர் லசித் மாலிங்க (170) ஆகியோரைத் தொடர்ந்து ஐ.பி.எல். போட்டியில் 150 விக்கெட் வீழ்த்திய மூன்றாவது பந்துவீச்சாளர் என்ற பெருமையையும் புவனேஸ்வர் குமார் பெற்றார்.

இதேபோல் அமித் மிஷ்ரா (166), பியூஷ் சாவ்லா (157), யுஸ்வேந்திர சஹால் (151), ஹர்பஜன் சிங் (150) ஆகியோரும் 150 விக்கெட் என்ற மைல்கல்லை கடந்துள்ளனர்.




# டெல்லி அணி வீரருக்கு கொரோனா!



டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியில் வீரர் ஒருவருக்கு நேற்றுக் காலை நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனையில் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

அவருக்கு தலைவலி மற்றும் இலேசான காய்ச்சல் பாதிப்பு இருந்துள்ளது. இதனைத் தொடர்ந்து, புனே புறப்படத் தயாராக இருந்த டெல்லி அணியை நிறுத்திவைக்கும்படி அணி நிர்வாகத்திற்கு பி.சி.சி.ஐ. அறிவுறுத்தல் வழங்கியது. ஏனைய வீரர்கள் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொண்டு அதன் முடிவு வரும்வரை காத்திருக்கும்படி கூறியுள்ளது.

இதற்கு முன் பிசியோதெரபிஸ்ட் பேட்ரிக் பர்ஹார்டுக்கு கடந்த வெள்ளிக்கிழமை கொரோனா பாதிப்பு உறுதியானது. அதற்கு அடுத்த நாள் அணியில் வீரர்களுக்கு மசாஜ் அளிக்கும் தெரபிஸ்டுக்கு கொரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்டது. போட்டி அட்டவணையின்படி நாளை பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டெல்லி அணி விளையாடவுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7